நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

அருப்புக்கோட்டை
"நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி
தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.

முதல் பிரைஸ் ரூ 3000.

1927-௵ மே ௴ 4 ௳ க்கு பிரபவ ௵ சித்திரை ௴ 22 ௳ பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் ரூ 3000.

2-வது பிரைஸ்	ரூ	1500
3-வது பிரைஸ்	ரூ	1000
4-வது பிரைஸ்	ரூ	500
5–6-வது பிரைஸ்கள்	ரூ	200
100 ரூ-ல் 5-க்கு	ரூ	500
50 ரூ-ல் 20-க்கு	ரூ	1000
20 ரூ-ல் 50-க்கு	ரூ	10 0
10 ரூ-ல் 100-க்கு	ரூ	1000
5 ரூ-ல் 200-க்கு	ரூ	1000
3 ரூ-ல் 600-க்கு	ரூ	1800
2 ரூ-ல் 2400-க்கு	ரூ	4800
ஆக பிரைஸ்கள் 3881-க்கு	ரூ	17500
புக் 1500-க்குக் கமிஷன்	ரூ	3000
குமஸ்தா சம்பளம், அச்சுக் கூலி, விசேஷக் கமிஷன் வகையறுக்கள்	ரூ	1800
தனிப் பிரைஸ்	ரூ	1700
பண்டுக்கு	ரூ	9000
ஆக	ரூ	33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

33000 சீட்டுகளுக்கு மேல் விற்பனையானால் ஈவுப்படி பண்டுக்கும், செலவுக்கும் போக மீதத் தொகையை 4 ரூபாய்ப் பிரைஸ்களாக எடுக்கப்பெறும்.

1–வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்துக்குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வெளியூர் புள்ளிகளுக்கு மணிபாடர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பக்கூடும்.

சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கட்ட வேண்டும்.

விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

மதுரை நாடார் மகாஜன சங்கம் முக்கியஸ்தர்களை அழைப்பித்து அவர்கள் முன்னிலையில் அருப்புக்கோட்டை, "நாடார் குல மித்திரன்" ஆபீஸில் பிரைஸ் எடுக்கப் பெறும்.

தனிப் பிரைஸ் விபரம்.

1-வது பிரைஸ்	ரூ	100
2-வது பிரைஸ்	ரூ	50
3-வது பிரைஸ்	ரூ	20
4-வது பிரைஸ்	ரூ	15
5-வது பிரைஸ்	ரூ	10
6–முதல் 10 வரை 5 வீதம்	ரூ	25
11-முதல் 750-வரை 2 வீதம்	ரூ	1480
ஆக	ரூ	1700

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்ந்து கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5-ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம். தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினால் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும் அதற்குப் பிரியமில்லையானால் அதற்குரிய ரூ 5-யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

குறிப்பிட்ட 4—5—27-க்கு 15 நாளைக்கு முன்னதாகவே பணமும், கவுண்ட்டர்பாயிலும் கிடைக்கும்படி அனுப்பித் தர வேண்டும். நேரில் செலுத்த விரும்புவோர் ரசீது வாங்கிக் கொண்டு செலுத்த வேண்டும்.

புஸ்தகம் விற்பனை செய்தவர்களுக்கு பிரைஸ் சாபிதா தயாரானவுடன் அனுப்பக் கூடும். தனியாய் வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு.

பத்துச் சீட்டுகளுக்கு ஒரு பிரைஸ் கிடைக்கும் வண்ணம் அமைத்திருக்கிறது.

அதிகமான தொகை பெரும்பாலோருக்குக் கிடைக்கும்படி உயர்ந்த பிரைஸ்கள் அதிகமாயமைத்திருக்கிறது.

2 புஸ்தகம் விற்றவர்களுக்கு சீட்டுக் கமிஷன் ரூ 4-ம், தனிப்பிரைஸ் ரூ 2-ம் ஆக ரூ 6 திட்டமாய் லாபம் கிடைக்கும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்களுக்குச் சீட்டுக் கமிஷன் ரூ 10, விசேஷக் கமிஷன் ரூ 5, தனிப் பிரைஸ் ரூ 5, ஆக ரூ 20 லாபம் கிடைக்கும்.

உயர்ந்த பிரைஸ் தொகைகளில் பிடிக்கக் கூடிய தொகைகளையும், அப்பிரைஸ்களுக்குரிய சீட்டு விற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடும்.

இவ்வூர் நாடார் சமூகத்தில் இதற்குமுன் நான்கு லாட்டரிகள் சேர்க்கப்பெற்று ஒழுங்கான முறையில் வெற்றியுடன் நடைபெற்றிருக்கின்றன.

இதுவும் கடவுள் கிருபையால் வெற்றி பெற நடக்குமென்றே நம்புகின்றோம்.

"நாடார் குல மித்திரன்" சந்தாதேயர்களுக்கும், மற்றும் பல குலாபிமானிகளுக்கும், நாடாரல்லாத அநேக கனவான்களுக்கும், கற்றவர்களுக்கும் ஏராளமான சீட்டுப் புஸ்தகங்கள் விற்பனைக்கு அனுப்பியிருக்கிறோம். ஆகையால் குறிப்பிட்ட நாளைக்கு முன்பே பூரணமான தொகைகள் சேர்ந்து குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கப்பெறுமென்று நம்புகிறோம். நமது நாட்டுக்கும், நாடார் குலத்துக்கும், நல்லூழியம் புரிந்து வரும் "நாடார் குல மித்திரன்" க்ஷேமத்தைக் கோரி ஏற்படுத்தியிருக்கும் லாட்டரிச் சீட்டை வாங்குகிறவர்களுக்கும், சீட்டை விற்கிறவர்களுக்கும், நல்ல தருமமும், நல்ல லாபமும், எல்லாம் வல்ல இறைவன் கருணையும் எப்போதும் கிடைக்க வேண்டுமென்று சதா ஸ்துதி செய்கின்றோம்.

உங்களுக்கு வேண்டிய நமது லாட்டரி புஸ்தகங்களுக்கு உடனே எழுதியனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.

சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.

காலப்போக்கு.

(தேவிதாஸன் எழுதுகிறுர்.)

இங்கிலாந்தில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்பட்ட பகைமுற்றிலும் ஒழியவில்லை. இதனால் வியாபார நிலைபாதிக்கப்படுகிறது. லண்டன் நகரக்கடைக்கு அதிகமாய் வெளியிலிருந்து ஜனங்கள் வரமுடியாமற் போயிற்று. ஆகையால் சந்தைக்கடைக்கு வருகிறவர்களுக்கு ரெயில் சார்ஜ் முதலியன கிடையாதென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. வியாபார தந்திரங்களிலிதுவு மொருமுறை தான்.

* *

வேல்ஸ் இளவரசருக்கும் ஸ்பெயின் தேசத்தின் ராஜகுமாரிக்கும் விவாஹம் நடக்குமென்ற வதந்தியுலாவுகிறது. ஒத்தமேமாட்டி அரசியாக விருக்கின்றனரோ?

* *

பெல்ஜியத்தில் சிக்கன ரூலை மிகப் பிரியப்படுத்தி வருகிறார்களாம். அரசருங்கூட யுத்தகாலத்தில் ஏற்பட்ட சாதாரண ரொட்டியைத்தான் சாப்பிடுகிறார். இதனால் அநேக பணம் மிச்சப்படுகிறது. உலகத்தில் டாம்பீகமே தரித்திரத்தை வளர்க்கும். சிக்கனம் மிக்கசெல்வமளிக்கும். எல்லோரும் உண்பதொரு பிடி உடுப்பது நான்கு முழம் என்ற ஏற்பாட்டிற்கு வந்துவிட்டால் தரித்திரம் வராது; சமாதானக்குறை யிராது.

* *

சண்டைக்குப்பின் ஐரோப்பாவில் தீண்டாப்பறையர்களாக ஒதுக்கப்பட்டிருந்த ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் பூரணமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு நாடு தனித்திருந்தாலும், மெலிந்து போனாலும் அக்கண்டத்திற்கே ஆபத்து எனக் கண்டவுடன் சேர்க்கப்பட்டு ஐரோப்பாவின் ஒற்றுமைக்கு ஜெர்மனி பூரணமாய் ஒத்துழைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ருஷியாவுக்கு விமோசனமேற்படுமோ? அதுவும் அதே முயற்சியின் பலன் விருத்தியாகும்போது சேர்க்கப்படும். பகையாளியாயிருந்த ஜெர்மனியை சர்வதேசங்களும் உறவாளியாகக் கொண்டாடுகிறது; என்றாலும் சண்டையின் ஞாபகம் எத்தனை தலைமுறையானாலும் மறந்து போகாது; வஞ்சமும் ஒழியாது. இனியொரு தரம் எவ்வழியில் இலேசாய் இரகசியமாய் வெல்லலாமென்ற எண்ணம் திண்ணமாயிருக்கக் கூடும்; ஆனல் சர்வதேச சங்கம் ஒரு சில வல்லரசுகளதாயிராமற் போனால் சமாதானக் குறைவு சாமான்யமா யேற்பட்டு விடாது.

* *

சர்வ தேசசங்கத்திற்குப் போயிருக்கும் ஸர் பி. ராமசாமி ஐயர் அச்சங்கத்தில் இந்தியர்களை அதிகமாய் உத்தியோகத்திற் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். வேண்டியதுதான். பணத்திற் படுத்தூங்கும் ஐயராவது, ஐயங்காராவது, ஜமீன்தாராவது போகத் தயார்தான். அவர்கள் பெட்டிப்பணம் விர்த்தியாகவுங்கூடும். இதனுல் இந்திய ஏழைமக்கள் கவலையொரு சிறிதேனும் ஒழியுமா?

* *

ஜப்பானில் பிரஜா வுற்பத்தி வர வர அதிகரிக்கிறது. இறப்பவர்களை விட ஒரு மணிக்கு 23 பிள்ளைகள் அதிகமாய்ப் பிறக்கின்றனவாம். இவ்வாறு பிறப்பதிகரிப்பால் அத்தேசத்திற்குள் வசிக்க வி [illegible] அதனத [illegible] தென்று கருதி [illegible] பக்கத்திலுள்ள சைனாவும் அமெரிக்காவும் வெகு விழிப்புடன் ஜப்பான் குடியேறுவதைத் தடுத்து வருகின்றன. இதைப்பற்றி ஜப்பான் மிகுந்த கவலையடைகிறது. ஜனங்கள் இருப்பட்டால் தொழில் வேண்டும்; சாப்பாடுவேண்டும்; தங்கவிடம் வேண்டும். இதில்லாவிடில் என் செய்வார்? பாவம்! யுத்தம் செய்து ஜனத்தொகையைக் குறைக்கவோ [illegible] தோற்றுப்போனுலென்ன செய்வதென்ற கவலைதான் அவர்களின் யுத்தசன்னதத்தைத் தடுத்து வருகிறது. நியாயமாய் ஜப்பான் குடியேறும் உரிமையை சைனாவாவது அமெரிக்காவாவது தடுத்தால் அதுவும் கடவுளுக்கேற்காது. தெய்வபார்வை அவர்கள்பாற்குறையுமென்பதை நாம் கூறவேண்டியதில்லை.

* *

அமெரிக்கா மகாயுத்தத்தில் அதிகமாய்ச் சேராமல் அதன் செல்வமும் சிறப்பும் மிக விருத்தியடைந்து வந்திருக்கின்றன. ஜப்பானில் அடிக்கடி பூகம்பம் நேர்வது போல் அமெரிக்காவில் அடிக்கடி புயலுண்டாகி மிகுந்த சேதமுண்டு பண்ணிவருகிறது. சமீபத்தில் மணிக்கு 90 மைல் வேகமுள்ள புயலுண்டாகி ஆயிரக்கணக்கான ஜனங்களும், வீடுகளும், கோடிக்கணக்கான திரவியங்களும் சேதப் பட்டிருக்கின்றன. இதென்ன ஜப்பான் சாபமா? கேள்வி முறையின்றி வாயு மண்டலம் வரையுயர்ந்த மேடைகள் கட்டினார்களென்று வாயுவின் கோபமா? என்னே இயற்கைப் பெருமான் சக்தி! வாயு ஒருக்கணமேனு மில்லேல் உலகம் ஸ்தம்பித்துப்போகும். அவ்வளவு கருணையோடு உலகெல்லாம் காக்கும் கடவுளின் கோபத்திற்கு யார்தான் முன்னிற்க முடியும்? போகட்டும்—இந்தியா யென்ன பாவம் செய்தது? கராய்ச்சியில் கடும்புயலுண்டாகி 2200 குடிசைகள் நாசமாய் விட்டன. வங்காளக்குடாக்கடலில் 170 உயிர்களை மாய்த்து விட்டது.

* *

வாயுவேகவர்ணனை.

வந்தவாயுவும் வந்துவந்தனைந்தனன் [வரையை
முந்திவேரதப் பரித்தனன் கொடுமுடி [மூன்றை
அந்த மூன்றையுங்கொடு நமன்றிசை [யினிலடைவே
சிந்தினன்றல மூன்றிலே விழுந்தன [சிகரம்
முன்னர் வீழ்ந்திடு சிகரிகாளத்தியா [மொழிவர்
பின்னர்வீழ்ந்தது திரிசிராமலையெனும் [பிறங்கல்
வன்னதின் பிற்கமைந்ததுக்கோணமா [வாசல்
இன்னமூன்றையுந் தக்ஷிணகைலையென் [றிசைப்பர்

முன்னொருகாலத்தில் ஆதிசேஷனுக்கும் வாயுவுக்கும் தங்கள் தங்கள் பலத்தைக்குறித்து நடந்தசம்வாதத்தில் ஆதிசேஷன் மேருவைச் சுற்றி அசையாமற்கட்டிக் கொள்ள வாயு தம் பலத்தால் அக்கட்டை யுடைக்கத் தம் முழு வேகத்தையும் பிரயோகித்து மேருவிலறைந்து அடிபெயர்த்து ஆதிசேஷன் கட்டை நெகிழ்த்து மேருவின் பல சிகரங்களைப் பெயர்த்து பல விடங்களிலும் சிதற அடிக்கும் போது திருக்காளத்தியிலொரு குன்றும், திருச்சினுப்பள்ளியிலொரு குன்றும், திருக்கோணத்திலொரு குன்றும் வந்து விழுந்ததாக செவந்திப்புராணஞ் செப்புகிறது. இதையெல்லாம் இக்காலத்தவர் புராண சம்பிரதாய மென்பர். வாயுசம்பிரதாயத்தை யறிவரேல் உலகத்தையே புரட்டி விடக்கூடுமென்றறிவர்.

* *

வடஇந்தியாவில் மழை பலமாகப் பெய்து எங்கும் பிரவாகம் பலமாயிருப்பதினுல் பூமிக்கு ஜலதோஷம் கண்டிருக்கிறது. தென்னிந்தியாவிலே மழை பெய்யவேண்டிய இக்காலத்தில் கதிரவன் காய்ச்சலால் குளங்குட்டைகளுக்கெல்லாம் நாவரட்சி யேற்பட்டிருக்கிறது.

* *

நாடெங்கும் ராஜீய மேகஞ் சூல்கொண்டு தேர்தல் என்னும் முழக்கம் முழங்கிக்கொண்டிருக்கிறது. மின்னலைப்போல் பல கட்சிகள் தோன்றி மறைந்துகொண்டிருக்கின்றன. வகுப்புத்துவேஷங்களெனும் இடிகள் இடித்துக்கொண்டிருக்கின்றன. சண்ட மாருதம் போல [illegible] யட்டுமென்று தேவி பராசக்தியைத் தியானிக்கின்றேம்.

* *

தென்னுப்பிரிக்காவில் இந்தியர்களைத் தீண்டாதவர்களாய்ச் செய்து வைத்திருக்கும்தீமையையெப்படித் தீர்த்துக்கொள்ளலாமென்று பார்த்துப்போவதற்காக தென்னுப்பிரிக்கா தூதர்கள் இந்தியாவுக்கு வந்து பம்பாய்விட்டு போனவாரம் சென்னையைப் பார்த்துப் போயிருக்கிறார்கள். இதனின் பிரயோசனம் எவ்வளவு நன்மைதருமென்பதை இப்போது சொல்லமுடியாது. இந்தியா பிரபல சக்திவாய்ந்த ஒரு புராதனதேசமென்பதும் தென்னுப்பிரிக்காவுக்கு மட்டுமல்ல, மற்றெல்லா நாடுகளுக்கும் உபயோகமான பெரிய கண்டமென்றும், அதன் உபகாரம் கெட்டாலுக்குக் கட்டாயம் வேணுமென்றும், தூதர்கள் மனதில் பசுமரத்தாணி போற்பதிய வேண்டும். 7கோடி இந்தியர்களைத் தீண்டாதவர்களாக வைத்துக்கொண்டு நம்மிடம் சும்மா கூலிக்கு மாரடிப்பவர்களாய்க் குறை கூறி [illegible] தோன்றிவிடக்கூடாது. தீண்டாமை விஷயத்தில் வெட்டாவைப்பார்க்கிலும் முட்டாள்தனம் இந்தியாவெங்கும் இருக்கிறது. இன்னும் சில நாளையிலாவது மறைந்து போகுங்குறிகளைத் தூதர்களும் நிதர்சனமாய்க் காட்ட வேண்டும் என்பதை நமது நாட்டினர் உணரவேண்டும்.

* *

பண்டைநாள் முதலின்றை நாள் வரையும் உண்டு ருசிகண்ட பழம் பெருச்சாளிப்பத்திரிகைகள், தென்னுப்பிரிக்காத் தூதர்களுடன் சென்னையில் கைகுலுக்கும் பாக்கியம் கனம் பனகால்ராஜாவுக்குக் கிடைத்ததைக் கண்டு வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு மாரடிக்கின்றன.

* *

சேலம் ஸ்ரீமான் வி. ராஜகோபாலாச்சாரியார் சுயராஜ்யக்கட்சியார் சட்டசபையில் அதிகமாய் நுழைய இடங்கொடுத்தால் கட்குடி நின்று போகுமென்று கருதுகிறார். ஸர். டி. விஜய ராகவாச்சரியார் கானடாவிலிருந்துகொண்டு இந்தியாவில் தென்னைமரங்களெல்லாம் தொலைந்தால் கட்குடிநிற்கும்; இலதேல்குடியொழியாதென்று கூறுகிறார். இருவர் கொள்கைகளும் ஒப்பத்தக்கதல்ல.

* *

நமது ஸர். ஆச்சாரியார் இந்தியாவுக்கு சுயஆட்சி பத்து வருஷங்களிற் கிடைக்குமென்று கானடாவில் சோதிடம் சொல்லியிருக்கிறார். ஆனல் தீண்டாமையெனும் கொடியவியாதி தீர்ந்து தகா வைதீகமுறைக்கு எப்பொழுது சாவுமணியடிக்குமோ அப்போது தான் சுயராஜ்யக் கொடி பறக்குமென்று நமது தேவி சோதிடம் கூறுகிறள்.

* *

இட்டாலிக்கும் பிரான்ஸிக்கும்முறுமுறுப்புக்கண்டிருக்கிறது. யுத்தமேகம் சூழ்ந்துவருகிறது. இட்டாலியின்சர்வாதிகாரி மிஸ்டர் முஸோலினியின் ஏகாதிபத்திய ஆசையால் என்ன நேருமோ வென்று எதிர்பார்க்கப்படுகிறது. பேராசையும் டாம்பீகமும் மனிதருள்ளத்தில் வளர வளர அது நாசகாலத்தையே கொண்டுவந்து சேர்க்குமென்பதிலையமுண்டோ?

* *

சந்திர மண்டலத்துக்குப் போகக் கூடிய வேகமுள்ள ஒரு பாணம் அமெரிக்காவில் தயார்செய்கிறார்களாம். ருஷியாவிலோ அப்பாணத்தின் வழியாய் ஒரு மனிதனையும் அனுப்பி அது திரும்பிவரவும் ஏற்பாடுநடக்கிறதாம். அதற்கு மனிதரும் தயாராயிருக்கிறார்கள். எல்லாம் அறிவார்கள்; ஆண்டவனை மட்டும் அறியமாட்டார்கள். அறிந்தால் சந்திரமண்டலம் நமது மிகச்சிறு அறையில் காணலாம் என்று தேவி செப்புகிறுள்.

* *

ஈசன் எல்லாவற்றையும் அறிய சக்தியைக் கொடுப்பார்; ஆனல் தன்னையறியும்சக்தியை சாமான்யமாய்க் கொடு [illegible] மாட்டாரென்று தேவி ஞானம் செப்புகிறது.

நாடார் மகாஜன சங்கம், மதுரை.

ஸ்காலர்ஷிப் லாட்டரி
பிரைஸ் உதயமான விபரம்.

5000 ரூபாய் பிரைஸ்

பி. செந்தூர்பாண்டிய தலைவர் கார்டியன் நல்லதம்பித்தலைவர், வேண்டுராயபுரம், மல்லி(போஸ்ட்)சாத்தூர்(தாலுகா)

2500 ரூ பிரைஸ்

அ. சௌவுரிராஜுலுசெட்டியார், பேட்டை, மல்லசெட்டிதெரு, கும்பகோணம்.

1000 ரூ பிரைஸ்

க. தா. கோவிந்தசாமி தவுல்காரர், ஆவராணி, புதுச்சேரி (போஸ்ட்) சிக்கல் நாகப்பட்டணம் (தாலுகா)

500 ரூ பிரைஸ்கள்.

செ. அ., செ. ஐய நாடார், பலசரக்கு கடை, கல்லூரணி அருப்புக்கோட்டை தாலுகா. மா. குருவம்மாள், பாலமேடு, அலங்காநல்லூர் (போஸ்ட்)

250 ரூ பிரைஸ்கள்.

மொ. கா. இ. நயினா முகம்மது ராவுத்தர், புதூர், திருப்புவனம் போஸ்ட். க. மாகாளி குடும்பத்தி, ஆத்தூர்கஸ்பா, ஆவரங்காடு, ஆறுமுகநேரிபோஸ்ட். திருநெல்வேலி (ஜில்லா) த. மந்திரநாடார் க. V. கம்பவுண்டு தூத்துக்குடி. சா. இசக்கி ஆசாரி, முக்கூடல். திருநெல்வேலிஜில்லா. ராமையா க. குமாரசாமி அய்யர், பத்தடி 8ம் தெற்குபெருமாள் மேஸ்திரிதெரு, மதுரை.

100 ரூ பிரைஸ்கள்.

கருத்தய்யாஎன்றகுப்பைமுத்துநாடார், மார்த்தாண்டம்பட்டி, கோவில்பட்டி(தாலுகா) அ. ராமசாமிசெட்டியார், பலசரக்கு மளிகை, மானாமதுரை. காந்தி பெ. க. கா. சிவசெல்லை செல்லப்பெருமாள் நாடார் குமாரர் ஆதிநாராயண நாடார், முத்துக்கிருஷ்ணபுரம், கிருஷ்ணியகரம் (போஸ்ட்). பி. நாகலிங்கம் சர்வேயர் பி. டப்ளியூ. டி. மஸைக்கா. எஸ். எஸ். கால நாடார் மகன் ஆகாச நாடார், கம்மாபட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் (போஸ்ட்). கா. ம. அலாவுதீன் ராவுத்தர், கீழவெளிமூல வீதி, மதுரை. மா. க. நாகுபிள்ளை, சோடாபாக்டரி, அருப்புக்கோட்டை. நாகம்மாள், கதிர்வேல் நாயக்கர்மகன், அம்பிநாயக்கம் பட்டி, கண்டமநாயக்கனூர்(போஸ்ட்) பெரியகுளம் (தாலுகா) ஆ. மாயாண்டித்தேவர், திருமலாபுரம், போடிநாயக்கனூர்(போஸ்ட்) வி. டி. யம். ஜோஸப், 3 ம் பள்ளிவாசல் சந்து, கொல்பட்டி, கொழும்பு. நவமணிநாடார், தென்னம்பட்டி, பண்ணைகுளம் (போஸ்ட்). சிங்காரவேலு நாடார், மரக்கடை, கூத்தாநல்லூர், தஞ்சாவூர் (ஜில்லா) Aliniah, c/o Savurbacha, Forrier, Chemor, F. M. S. க. ச. பழனிச்சாமிநாடார், ஜவுளிவியாபாரம், திருத்தங்கல்.

குறிப்பு:—

17-9-26-ல் பகல் 2-மணிக்கு பிரைஸ் எடுக்க ஆரம்பித்து, 25 9-26-ல் காலை 6-மணிக்கு பிரைஸ்கள் எடுத்து முடிவு பெற்றது. நூறு ரூபாயும், அதற்கு மேற்பட்ட பிரைஸ் விபரங்களையும் வெளியிட்டிருக்கிறோம். மற்ற பிரைஸ் விபரங்கள் இன்னும் 2 வாரத்துக்குள் ஜாபிதா அச்சிட்டு புஸ்தகம் விற்பனை செய்தவர்களுக்கு அனுப்பப்பெறும்.

தனிப்பிரைஸ்!

பெ. க. ஆறுமுகநாடார், பனை தும்பு வியாபாரம், செகநாதபுரம், காக்கிநாடா.	ரூ 100
வி. எஸ். கருப்பணநாடார், சித்திரகாரத்தெரு மதுரை	ரூ 50
வி. சுப்பையாநாடார், மதுரை	ரூ 20

குறிப்பு:— மற்றும் 10 ரூபாய் 5 ரூபாய் இரண்டு ரூபாய் பிரைஸ்கள் [illegible] உதயமாயிருக்கின்றன.

லாட்டரி கமிட்டி.

நாடார்குலமித்திரன்

அக்ஷய ஹூ புரட்டாசி மீ ௰௮ உ

லாட்டரி வெற்றி.

நாடார் மகாஜன சங்கம்

ஏழை மாணவர்கள் சகாய நிதி லாட்டரிப் பிரைஸ் கூடுமானவரையும் வெற்றியுடன் முடிந்தது பற்றி மிகவும் சந்தோஷமடைகின்றோம்.

லாட்டரியை வெற்றியுடன் முடிக்க வேண்டிய சர்வ பிரயத்தனங்களும் தளராமற் செய்த கனவான்களுக்கும், நண்பர்களுக்கும் வாழ்த்துக் கூறுகின்றோம்.

நாடார் மகாஜன சங்கம் தோன்றிய நாள் முதல், மிகவும் திறமையான காரியதரிசிகள் எத்தனையோ பேர்கள் சங்கத்தை நாடார் மகாஜனங்களனைவருக்குமோர் காமதேனுக்குச் சமானமாக்கி வைக்க வேண்டிய முழு முயற்சியும் செய்து வந்தார்கள். அதனால் நாடார் சமுகத்துக்கு கல்லாற்றலும், ஊக்கமுமுண்டானதென்பதிலும், ஜெர்மானியர்களைப்போல் பல பராப்புடன் முன்னேறும் வகுப்பினர்களென்று கவர்ன்மெண்டார் முதலிய யாவரும் புகழத்தக்க நிர்வாகம் நடத்தி வந்தார்களென்பதிலும் யாதொரு சந்தேகமுமில்லை. ஆயினும் இலவசமாகக் காரியதரிசி வேலை பார்ப்பதற்கு யாராலும் முடியாமல் ஒவ்வொரு வருடத்திலும் மிகுந்த கஷ்டப்பட்டுத்தான் காரியதரிசிகள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஏற்றுக்கொள்ளுகிறவர்களும், தங்கள் பொறுப்புள்ள சொந்த அலுவல்களுக்கிடையில் பெரிய மகாசபையை நிர்வகிப்பது சாத்தியமாகாது என்று தங்கள் பதவியை ஒப்புக்கொண்டாலும், ஒப்புக் கொண்டபின் சதா சங்கமே தங்கள் சொந்த வேலையெனப் பாவித்து நடத்தி வந்திருக்கிறார்கள். இவர்களில், ஸ்ரீமான் பாண்டிய நாடாரவர்கள் ஸ்தானம் ஏற்கும்போதோ நமது நாட்டிலும், நாடார் மகாஜனங்களுக்குள்ளும் ஓர் விதமான தளர்ச்சி தோன்றியிருந்ததுடன், மகாஜன சங்கத்திலும் பொருளாதார நிலைமை மிகக் குன்றி சங்கமெனுஞ் சக்கரம் இனிச் சரியாய்ச் சுழலுமா வென்ற சந்தேகமுந் தோன்றியிருந்தது. இம்மிடுக்கான வேளையில் ஸ்ரீமான் பாண்டிய நாடாரவர்கள் கருமமே கண்ணாப் பரமசாதுவாய் தம் கடமையைத் தைரியமாய்ச் சமாளித்துக் கொண்டு வந்தார். இடையில் துணைக்காரியதரிசி ஸ்ரீமான் தங்கமணி நாடாரவர்கள் பிரிந்து போனவுடன் சிறிது தயங்கினாருமில்லை.

உடுக்கை யிழந்தவன் கைபோல [வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

என்று திருக்குறள் கூறுவது போல் ஸ்ரீமான் ஆறுமுக நாடாரவர்கள் துணைபுரிய முன் வந்துள்ளார். அவர்களுடைய சகாக்களும் அவர்களுடன் ஒத்துழைப்பதில் மிகவும் பிரிய முடையவர்களாய் முன் வந்தார்கள். சர்வ வல்லமையுள்ள கடவுள் அனுக்கிரகத்தினாலும், சங்கத்தின் மீது சதா பக்தியுள்ள நண்பர்களின் ஒத்துழைப்பினாலும், தங்கள் சலியா முயற்சியினாலும் தாங்கள் எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடித்து விட்டார்கள். குறிப்பிட்ட இரண்டு லட்சம் சீட்டுகள் சேரவில்லை யென்று சிலர் கூறலாம். ஆதியில் தீர்மானிக்கும் போதே ஒரு லட்சம் தான் சேருமென்று மதிப்பிடப்பட்டது; ஆயினும் இரண்டு லட்சத்தை முன் வைத்து முயற்சி செய்ய வேண்டுமென்றே தீர்மானித்தோம். ஆகையால் ஆதியில் நாம் கொண்ட தீர்மானப்படி காரியம் முடிந்து விட்டதென்றே திருப்தியடைவோமாக. சுமார் நாற்பதினாயிரம் ரூபாய் நமது நாடார் மகாஜன சங்கத்துக்கு இருப்புக் காட்டிய பெருமை தற்போதுள்ள காரியதரிசிகளிருவர்களுக்குமே யென்பதை நாம் சந்தோஷத்துடன் கூறுகின்றோம். அவர்களிடம் நீண்ட ஆயுளும், திடமும், திறமையும், செல்வமும் வளர்ந்து வாழக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். இன்னும் பெரியதோர் நிர்மாணத் திட்டமியற்றி நமது மகாஜனங்களுடைய க்ஷேமங்களைக் கருதி சதா வேலை செய்ய வேண்டுகிறோம். மேலும், பண்டுக்கு ஒரு லட்சம் வேண்டுமென்பதில் ஜனங்களும், சர்வாதிகாரிகளும் கவனமாயிருந்து இன்னும் சந்தா, நன்கொடை முதலியவைகளால் பொருளை விருத்தி செய்ய வேண்டுமென்பதில் ஊக்கமுடையவர்களாயிருந்து வர வேண்டுமே யொழிய பணம் சேர்ந்து விட்டதென்று முயற்சியைத் தளரவிடக்கூடாது. செலவினங்களை வரவறியாமல் விருத்திசெய்து மீண்டுமாபத்தைத் தேடிவிடக் கூடாதென்பதையும் ஞாபகப்படுத்துகிறோம்.

அநேக நண்பர்கள் பிரைஸ் ஜாபிதா எப்போது வெளிவருமென்று நமக்கெழுதிக் கொண்டிருக்கிறார்கள். 100 ரூபாயினின்று மேற்பட்ட பிரைஸ்களை மற்றொரு பத்தியிற் பிரசுரித்துள்ளோம். மற்றும் சில்லரைப் பிரைஸ் ஜாபிதா வேகமாய்த் தயாராகிக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் வெளிப்படுத்துவார்கள். பொறுமையுடனிருந்து வரப் பெறுவார்களாக.

குறிப்புகள்.

க்ஷேமநிதி லாட்டரி.

நாடார்குலமித்திரன் க்ஷேமநிதித்தர்மப்பண்டு லாட்டரி வெகு நாளைக்கு முன்பே நடந்து முடிந்திருக்கவேண்டியது; ஆனால் தாய்ச்சங்கம் ஏழை மாணவர்கள் சகாயநிதி லாட்டரி முடியட்டுமென்றே காத்திருந்தோம். தாய்ச்சங்கம் லாட்டரி வெற்றியுடன் முடிய நம்மாலான வேலைகளெல்லாம் செய்தோம். கடவுள் கிருபையால் அது நிறைவேறிவிட்டது. இனி நமது லாட்டரியின் வெற்றிக்கு எல்லோரும் ஒத்தாசை செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம். நமது வேண்டுகோளை கவனித்து தக்கது செய்ய மீண்டும் மகாஜனசங்கமும் நமக்கு வேண்டிய ஒத்தாசைசெய்யுமென்று நம்புகிறோம். என்றும் மித்திரன் மீது மிகுந்த அன்புள்ள சிலோன் பர்மா, ஈப்போ, பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிப்பிரதேச கனவான்களும், நண்பர்களும் மித்திரன் மீது விசேஷ அபிமானங்காட்டி நாமெடுத்த காரியத்தை வெற்றிபெறச் செய்வார்களென்று நம்புகிறோம். இன்று முதல் சந்தா நண்பர்களுக்கும் மற்றும் சிநேகிதர்கட்கும் லாட்டரிப் புஸ்தகம் அனுப்பி வருகிறோம். எல்லோரும் காலாகாலத்தில்விற்று பணமனுப்பி வந்திருந்து நடத்திவைக்கவேண்டுகிறோம். மித்திரன் காரியாலயத்தையும் நிலைமையையும் அநேகர் நேரில்பார்த்திருக்கமாட்டார்கள். இந்த நேரத்தில் எல்லோரும் இவ்வரியகாரியத்திற் கொத்தாசை செய்து வெற்றிபெற முடித்து நேரில் வந்திருந்து மித்திரனை இன்னும் விருத்தியுடன் நடப்பிக்கவேண்டிய ஆலோசனைகள் சொல்லி ஆசீர்வதித்தல் நமது பேருழியத்திற்குப் பெரிதும் உதவியாயிருக்குமென்று நம்புகிறோம். அனுப்பும் புஸ்தகங்களிலொன்றேனுந் தவறாமல் சீட்டுகளனைத்தையும் விற்றனுப்புவார்களென்றே எதிர்பார்க்கின்றோம்.

கோலாலம்பூர், நாடார் பரிபாலன சங்கம்.

அரை வருஷப் பொதுக் கூட்டம்.

21-8-26ல் மாலை 3 மணிக்கு ஷெ சங்கத்தின் அரை வருஷாந்தரப் பொதுக் கூட்டம் வெகு விமரிசையாய் நடந்தது.

உள்ளூரிலும், வெளியூரிலிருந்துமாக சுமார் 100 பேர் வரை அக்கூட்டத்திற்கு ஆஜரானார்கள். சங்கம் அக்கிராசனர் ஸ்ரீமான் பி. சாமுவேல் அவர்கள் அக்கிராசனம் வகித்து நடந்த ஆறுமாசங்களுக்குள் ஷெ சங்கத்தின் வளர்ச்சியைப் பற்றியும், அதன் மூலமாய் இவ்விடத்தில் நம்மவர்கள் அடைந்திருக்கும் நன்மைகளைப்பற்றியும், இனி நாம் அதனால் அடைய வேண்டியிருக்கும் பிரயோஜனங்களைப் பற்றியும், அதற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும் வெகு சவிஸ்தாரமாகவும், எழுப்புதலாகவும் பேசினார்.

பின்னர் கடந்த ஆறுமாதங்களின் ரிப்போர்ட்டும், வரவு செலவு கணக்குகளும்வாசிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டன.

ஷெ சங்கத்துக்கு கட்டட நிதி விஷயமாக அக்கிராசனர், நடந்த வருஷாந்தரப் பொதுக் கூட்டத்தில் தீர்மானித்தபடி ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களது ஒருமாத வருமானத்தில் நூற்றுக்குப் பத்து வீதம் வருகிற தொகையை நன்கொடையாகச் செலுத்தினால் நமது கட்டட நிதி இவ்வருஷத்திற்குள்ளாக பூர்த்தியாகு மென்று மிக வற்புறுத்திப் பேசினார்கள். மேலும் காரிய நிர்வாக சபை இதைக் கவனித்துக் கூடிய சீக்கிரம் கட்டடத்திற்கென்று ஓர் நிலம் வாங்கும்படியாகப் பிரயாசைப்பட்டு வருகிறார்கள்.

உப சபாநாயகர் மூலமாய், ஸ்ரீமான் வெ. பொன்னுசாமி நாடாரவர்கள் தம் குமாரர் சிரஞ்சீவி பெ. பொ. பெரியநாயக நாடார் பேரால் ஒரு புஸ்தகசாலையை இச்சங்கத்திற்கு இனாமளித்திருக்கிறார்கள். மேற்படி புஸ்தகசாலையின் திறப்பு விழாக் கொண்டாட்டம், ஷெயார் இப்பொதுக் கூட்டத்திற்கு விஜயஞ் செய்ய முடியாதிருந்ததனால் ஒத்திவைக்கப்பட்டு அடுத்த வருஷாந்தரப் பொதுக் கூட்டத்தில் மேற்படி வைபவம் நடைபெறும்படியாகத் தீர்மானிக்கப்பட்டது. இவர்களுக்கு இச்சங்கம் மிக்க நன்றி செலுத்துகின்றது.

"ஒற்றுமை" என்ற விஷயத்தின் பேரில் நீண்டதோர் உபந்நியாசம் கேட்போர் மனம் பரவசப்படும்படியாக ஸ்ரீமான் யப். பி. ஆரோக்கியம் அவர்களால் செய்யப்பட்டது. அதைப் பற்றி ஸ்ரீமான் ஜே. வ. சாமுவேல் அவர்கள் ஆமோதித்துப் பேசிய பின் பிரசிடெண்டவர்களும் அதை நன்கு விளக்கிக் காட்டினார்கள்.

மதுரை நாடார் மகாஜன வாரக் கொண்டாட்டம் இதே வாரத்தில் தான் நடந்தேறிய தென்றும், அதே வாரத்தில் நாமும் இக்கொண்டாட்டத்தைக் கொண்டாடக் கிடைத்தது மிகவும் வியக்கப்படத்தக்கது என்பதாக ஸ்ரீமான் வ. மகாலிங்கமூர்த்தி நாடார் பேசினார்கள். மேலும் நாடார் பாங்கு, நமது குலப் பத்திரிகைகள், பிரசார வேலை முதலியவைகளை இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் யாவரும் ஆதரிக்கும்படியாகவும் பேசப் பெற்று சபை இனிது கலைந்தது என்று காரியதரிசி எழுதுகிறார்.

தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களின் இந்திய கிறிஸ்தவ தொகுதி.

தஞ்சாவூரில் வதியும் ஸ்ரீமான் ஏ. டி. பன்னீர் செல்வமென்பார் (காதலிக்கர்) திருநெல்வேலி இராமநாதபுரம் ஜில்லாக்களின் கிறிஸ்தவதொகுதிக்காக சென்னைசட்டசபைத் தேர்தலில் அபேக்ஷகராய் நிற்கிறாரென்பதையறிய ஆச்சரியமும், மனவருத்தமுமுண்டாகிறது. சென்ற தேர்தலின் போது நாம் தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களுக்கு மூன்றாந்தடவையும் (நடைபெறப்போகும் தேர்தலுக்கு) அபேக்ஷகராக நிற்கவில்லையென்று ஸ்ரீமான் அற்புதசாமி உடையார் வாக்களித்திருந்ததின்படி இத்தடவை ஸ்ரீமான் ஏ. டி. பன்னீர்செல்வம் தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களுக்கு போட்டியன்னியில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் அல்லது எதிரியிருந்தால்போட்டிபோட்டாகவேண்டுமென்று தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களிலுள்ள ரோமன் காதலிக்கரும் ரோமன் காதலிக் கல்லாதாருமான கிறிஸ்தவ ஓட்டர்களாகிய நாம் கருதியிருந்தோம். ஆனால் இப்போது, ஸ்ரீமான் உடையார் (ரோமன் காதலிக்கர்) கௌன்ஸிலில் செக்ரட்டேரியாயிருந்து பணருசி கண்டவராகையால் தன்னுடைய வாக்குறுதியின்படிஸ்தானத்தை விட்டுக் கொடுக்க மனமில்லாது, செல்வாக்குள்ள சிலரின் உதவிகொண்டு ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தை திருநெல்வேலி ராமநாதபுரம் ஜில்லாக் கிறிஸ்தவ தொகுதிக்கு அபேக்ஷகராய் நிற்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். இவ்விருஜில்லாக்களுக்கும் ஸ்ரீமான் பன்னீர்செல்வமே தெரிந்தவரல்லர். இதை நோக்கும்போது பிரபலவக்கீலும் காதலிக்கல்லாதாரும் ஷெ இருஜில்லாக்களுக்கும் சுயேச்சை அபேக்ஷகராய் நிற்பவருமான பாளையங்கோட்டை ஸ்ரீமான் டானியல்தாமஸ்நாடாரவர்கள் வெற்றிபெறக்கூடாதென்ற துர்நோக்கங்கொண்டு செய்ததாகத் தெரிகிறது. இதற்குமுன் இருதேர்தல்களிலும் ஸ்தானங்கிடைத்து 6 வருடகாலமாய் சட்டசபையில் வீற்றிருந்த ஸ்ரீமான் உடையார் கிறிஸ்தவதொகுதிக்காக என்ன பயனளித்து விட்டாரென்பதையாம் நினைக்கில் தனக்கு மிகுந்த சம்பளம் பெற்றுவந்ததைத் தவிர்த்து வேறல்ல. தம்முடைய வாக்குறுதிக்கு மாறாக மூன்றாந்தடவையும் அபேக்ஷகராக நிற்பதற்குரிய நியாயத்தை தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஆகிய இடங்களில் பிரசங்கம் மூலமாயும் பிரசுரமூலமாயும் விளக்குவதோடு கிறிஸ்தவ தொகுதிக்கு தாம் இதற்கு முன் சாதித்த காரியங்களென்ன வென்பதையும் இனி செய்யப்போவதென்னவென்பதையும் வெளிப்படுத்துவாராக. நான் அறிந்த மட்டிலும் இரண்டொரு தடவை அதுவும் ஸ்தானப்போட்டி பேச்சு நடக்கும்போதுதான் தலைகாட்டியிருக்கிறார்.

இரு ஸ்தானங்களையும் ரோமன் காதலிக்கரே அபேக்ஷித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டு, ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தை போதனைக்குள்ளாக்கிய சுயநலப் பேர்வழிகளுக்கு ஸ்ரீமான் டானியல் தாமஸ்நாடாரவர்கள்வேண்டுகோள் செய்துகொள்ளாது போனது பரிதபிக்கத்தக்கது.

காதலிக்கல்லாதாருக்குக் கிடைக்கவிருக்கும் இந்தத்தருணத்தை, காதலிக்கர் தம்மாட்பலங்கொண்டு கைகூடாமற் செய்யவேண்டுமென்று கருதிவிட்டமட்டிலும், காதலிக்கல்லாதாருக்குக் கூறும் புத்திமதியாவது:- வரப்போகும் தேர்தலை பகிஷ்காரஞ்செய்ய வேண்டுமென்பதே. மனிதனுக்கும் மனிதனுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பிரிவு உண்டாகுவதில் பெருமை கொள்ளும் ரோமன் காதலிக்கரே பார்த்துக்கொள்ளட்டும். ஸ்ரீமான் பன்னீர்செல்வம் சுயநலங்கருதுவோரால் வயப்படுவோரென்றும் திருநெல்வேலி ராமநாதபுரம் ஜில்லாக்களுக்காக தான் வேலைசெய்யவேண்டிய, தமது ஜென்ம ஜில்லாவைப் புறக்கணிப்பாரென்றும் நான் ஒரு போதும் நினைக்கவேயில்லை. ஒற்றுமையில்லாதகுடும்பம் ஒருமிக்கக்கெடும். விரைவில் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் தம்முடைய நியாயத்தவறுதலை யுணர்ந்து சீர்திருத்திக் கொள்வது நலமாகும்.

காதலிக்கல்லோன்.

ஸ்ரீமான் ப. கொ. ச. அ.

ஆறுமுக நாடாரவர்களின்

அக்கிராசனப் பிரசங்கம்.

கமுதி, வித்தியாபிவிருத்தி சங்கம்,

11—வது ஆண்டு நிறைவு விழா.

சகோதரிகளே! சகோதரர்களே!! சான்றோர் உயரிய லக்ஷியங்களை பொது மக்களிடை பரப்ப முயலும் போது முதலில் நீங்கள் அமைத்துள்ள வித்தியாபிவிர்த்தி சங்கத்தைப் போல் பல இடங்களிலும் பல சங்கங்களை ஸ்தாபித்துக் கொள்ள முயற்சிக்க வேண்டிய அவசியமாகிறது. பல சங்கங்களை அமைத்து அறிக்கை வெளியிட்டால் தான் ஜனத்திரள்களிடையே உணர்ச்சியும் கிளர்ச்சியுமுண்டாகவே ஏதுவாகும். நடந்துகாட்டும் திறமை நம்மிடத்தில் இல்லையேல் என்ன தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி யெழுதி வைத்தாலும் ஏட்டுச் சுரைக்காய்போல் பயனற்றதாகவே வந்து முடியும். எனவே நண்பர்களே! "ஆயிரம் மடங்கு பேசுவதைப் பார்க்கினும் அரைப்பலம் அனுஷ்டானமே சாலச் சிறந்த"தென்று சுவாமி விவேகானந்தர் சொல்லிய பிரகாரம் இந்த சங்கத்தின் நிர்வாகிகளாகிய நீங்கள் உங்களால் நடக்கக் கூடிய ஏதேனும் சில சிறிய ஆசார சீர்திருத்தங்களையேனும் கொணர்ந்து நிறைவேற்றி முதலில் நீங்களே நடந்து காட்டி மற்றவர்களையும் இனே இனே நடக்கச் செய்து வந்தால் தான் அதி சீக்கிரம் உச்சஸ்தானம் பெற்று உயரிய நிலை யெய்துமென்பதில் யாதொரு ஐயமில்லை.

பொது நல ஊழியக் கூட்டுறவு சங்கமானது என்றும் மங்காமல் துஞ்சாப் புகழோடு நின்றுலாவுவதற்கு சங்கத்தின் நிர்வாகிகளாகிய உங்களுக்கு பொறுமையும் சாந்தமும் பிழை பொறுக்குஞ்சுபாவமும் சகிப்புத்தன்மையும் வேண்டும். "ஜீவபேதங்கள் அளவில்லை, செய்கையும் அளவில்லை" என்றபடி நம்மையாண்டவன் ரூபபேதங்களாகப் படைத்திருப்பதுபோல் குணபேதமாகவும் படைத்திருக்கிறான். நாம் விரும்பும் ஒரு நல்ல காரியத்தை மற்றவர்களும் அதேமாதிரி விரும்ப வேண்டுமென்ற நியதியல்ல. அவர்கள் விரும்பாதிருப்பதற்கு மூலகாரணம் சங்கத்தின் நிர்வாகிகளாகிய உங்களுக்கு உறுதியும் கட்டுப்பாடும் பொறுதியின்மையுமே காரணமென்று எண்ண இடங்கொடுத்துவிடும். உலகத்தில் என்று மழியாமல் நின்றிலங்குகின்ற எந்த இயக்கத்தைச் சீர்தூக்கிப் பார்த்தாலும் பொறுமையும் மனோ உறுதியுமுள்ள தியாக மூர்த்திகளின் பெரும் பிரயத்தனத்தினால் தான் நிலைத்து நின்றதாகத் தெரிய வருகிறது. உதாரணமாக சமண மதப்பற்றுடைய பல்லவ அரசனால் என்ன இடுக்கண் ஏற்பட்டும் ஓரே சாதனையாக நின்று சாதித்த நாவுக்கரசரால் சைவசமயம் தருக்க அஸ்திவாரத்தோடு நின்று பிரகாசிக்கிறது. கோபத்தை யடக்கி முன் பின் யோசனை யோடும் சாவதானத்தோடும் நற்காரியங்களைச் செய்து வருகின்ற ஒருவரிடத்தில் ஜோதிமயமான பிரகாசமுண்டாகி அவர்தம் உயரிய கருத்தானது பொது மக்களிடம் தானே பரிணமிக்க ஏதுவுண்டாகிறது.

யூத வகுப்பைச் சேர்ந்த பொந்திப் பிலாத்து அரசனால் இயேசு கிருஸ்து சிலுவையில் கடாவப்பட்டபோது புன்னகையுடன் உயிர் துறந்தார். கொஞ்சமாவது குரோதன வுணர்ச்சியேனும் பழிவாங்கு மெண்ணத்தையேனும் தனது உள்ளத்தில் கொண்டாரில்லை. நீதியை ஸ்தாபிக்கும் பொருட்டு கிறிஸ்துவானவர் தன்னைத்தானே தியாகம் செய்து கொண்டதனால் இற்றைக்கு வருஷம் 1925 ஆகியும் மங்காப்புகழோடு ஜனங்களிடத்தில் பரிணமித்துக் கொண்டிருக்கிறது.

அனைத்துலகையு மீன்ற பிரம தேவரானவர் உயிரினத்தையுஞ் சிருட்டித்து உவகையுற்றாரில்லை. அவரால் சிருஷ்டிக்கப்பட்ட உயிரானது தக்கது இன்னது தகாதது இன்னதென்று பகுத்துணர்ந்து முத்திப்பேற்றை யடையுமார்க்கத்தில் கொண்டுவிடக் கூடிய கல்வி கற்றபின் ஆனந்தமடைகிறாரென்பது ஆப்த மொழி. கல்வி ஞானமில்லையேல் தனுவெடுத்தும் பயனில்லை; தனுவின்றி ஞான மார்க்கத்தை அடைவதற்கு வழியில்லை. எனவே சகோதரர்களே! மெய்நூற்களை வோதியுணர்ந்து உய்வதற்கு நம் சிறுவர்களைப்பயிற்றுவிக்கச் செய்ய வேண்டியது நம் கடனாகிறது. நீங்கள் அமைத்துள்ள வித்தியாபிவிர்த்தி சங்கமே நான் மேலே சொல்லிய பிரகாரம் உயிர்கள் உய்வதற்குரிய கல்வி ஞானங்களையும் பொருட்டேற்படுத்திய சங்கமென்பதாக அர்த்தங்கொள்ளத் தக்கதாக விருக்கிறது. இந்தப் பாழான தற்காலத்தில் மேற்குநாட்டு நாகரீகத்தில் பழகிக் கொள்வதே கல்வியென்று கருதப்படுகிறது. இத்தகைய கல்வி முறைகளை கல்வியென்று சொல்ல என் மனம் இசையவில்லை. கல்வியை இரு கூறுகப்பிரிக்கலாம். ஒன்று ஞான மார்க்கத்தை யடைய துணைக்கருவியாயிருக்கின்ற உடலை ஓம்பும் பொருட்டு கைத்தொழில் விவசாயம் வியாபாரம் முதலிய துறைகளில் கொண்டுவிடத்தக்கது. மற்றொன்று சரீரத்திலுள்ள தத்துவங்களை உணர்ந்து நித்தியமின்னது அநித்தியமின்னது வென்பதை பகுத்தறிந்து பிரம்ம சொரூபத்தின் நிச்சயத்தைக் கண்டு கொள்ளுவது. இவைகளுக்குத்தான் கல்வியென்று நான் நினைப்பதோடு நமது முன்னோர்களும் நினைத்து வந்தார்கள். நான் பல நகரங்களிலும் சென்று அங்குள்ள கல்வி முறைகளை கவனித்து வந்திருக்கிறேன் இந்நகரத்தைக் கண்டவுடன் எனக்கே வியப்புண்டாகிவிட்டது. தற்காலத்திய மேற்கு நாட்டு நாகரீகமென்னும் பேய் வாய்ப்படவில்லை. பக்தி, ஒழுக்கம், ஆசாரம், கட்டுப்பாடு முதலிய நன்னெறிகளே உங்களிடத்தில் ஜொலிக்கின்றன. இதற்கெல்லாம் மூலகாரணம் நீங்கள் அமைத்துள்ள வித்தியாபிவிர்த்தி சங்கத்தின் ஒழுங்கும், கல்விச் சாலைகளின் முறைகளுந்தான் காரணமென்றெண்ண எனக்கு இடங்கொடுக்கிறது. நான் இது காறும் மேலே சொல்லிய நம்மவருக்கு உரித்தான, நம்மை உய்யுமார்க்கத்தில்கொண்டுவிடத்தக்க கல்வி ஞானங்களை நம் சிறுவர்களுக்கு பயிற்றுவிப்பதுபோல நம் சிறுமிகளுக்குஞ் சொல்லி வைக்கத்தக்க கல்விச் சாலைகளையமைத்துக் கொள்ள வேண்டும். பெண்மக்கள் கெடுவளென்றஞ்சி நமது ஸ்திரீ ரத்தினங்களை தற்காலத்திய கலாசாலைகளுக்கு அனுப்பக்கூடாதென்று நிகழ்காலங் கருதப்படுவதிலும் அருத்தங் கிடக்கின்றது. ஏனென்றால், தவறான வழியில் நம்மைக்கொண்டு விடத்தக்க, வெளிமயக்கான மேற்கு நாட்டு நாகரீகத்தில் மோகங் கொள்ளத்தக்க, கொடிய அசுரத்தன்மைவாய்ந்த கல்வி முறைகளைப் படிப்பதனால் பெண் மகள் கெடுவளென்று எண்ணினர் போலும். அவர்கள் செய்துவரும் மேற்கு நாட்டு பழக்க வழக்கமென்னும் குப்பையைக் கிளரக் கிளர நாற்றமே வீசும். இத்தகைய கல்வி முறைகளை கற்பதினால் பெண்மகள் கெடுவளென்பது நிச்சய மென்பதோடு, ஆண்மகன் கற்றாலும் கெடுவது நிச்சய மென்பதற்கு ஆட்சேபமில்லை. ஆண் தன்மைக்குரிய வீரம் தீரம் புருஷார்த்தம் முதலிய நன்னெறிகளையும் பெண் தன்மைக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய சன்மார்க்க நெறிகளையும் இருபாலர்களுக்கும் ஒருங்கே பயிற்றுவித்து இல்லற தர்மமெனும் சகடத்திற் பூட்டினால் எவ்வளவு ஒழுங்காகவும் அழகாகவும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் இழுத்துச் செல்வார்களென்பதை நீங்களோ சிந்தித்துப் பாருங்கள். ஆகவே நண்பர்களே! நமது சிறுவர் சிறுமிகள் நம் பாரத கண்டத்துக்குரிய நடையுடை பாவனைகளில் சித்தஞ்செல்லும்படி யேற்கனவே நீங்கள் செய்து வருவதைப்போல் இன்னுமதிகமாக சிரத்தை யெடுத்து மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக இருப்பதோடு மேற்குநாட்டு பழக்கவழக்கத்தில் அருவருப்படையச் செய்யும்படி திட்டத்தைக் கோலுவதற்கு ஸ்கூல் கமிட்டியார்களாகிய உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

நம் ஜன சமூகத்தின் அபிவிருத்தியை பூர்வகாலந்தொட்டு கவனித்துப் பார்க்கும்போது வியாபாரத்தாலே அபிவிருத்தியடைந்திருக்கிறோம். ஆதிகாலத்தில் நமது முன்னோர்கள் பொதிமாட்டு வியாபாரம் செய்து வந்த காலத்தில் ஒவ்வொரு முக்கிய கிராமத்திலும் நகரத்திலும் யாதொரு கஷ்டமின்றி சிரம பரிகாரம் செய்து கொள்வதற்கும் நூற்றுக் கணக்கான பேட்டைகளைக் கட்டி வைத்துப் போனார்கள். அவர்களால் கட்டி முடித்து வைத்துப்போன பேட்டைகளை பழுது பார்க்கவியலாமலும் பிறர்சுவாதீனப் படுத்திக் கொண்ட பேட்டைகளை மீண்டும் நம்வசத்துக்குக் கொணர்வதற்கு இயலாமலும் சக்தியற்றுக் கிடக்கிறோம். இவ்வித கேவல நிலைமைக்கு வந்த காரணம் கால நிலைக் கேற்றபடி நமக்கு வர்த்தகக் கூட்டுறவு சங்கங்கள் அந்தந்த இடங்களில் இல்லாதது தான் காரணமென்று யூகிக்க இடங்கொடுக்கிறது. ஆகவே சகோதரர்களே! வர்த்தகத்தில் தேர்ச்சி பெற்ற இந்நகர் பிரமுகர்களாகிய நீங்களே முதல் முதல் வர்த்தகக்கூட்டுறவு சங்கமொன்று நியமித்து. வியாபாரிகள் ஒன்றுக்கொன்று போட்டியில்லாமல் பணமுடைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்குரிய வேற்பாடு செய்வதற்கு அப்போதைக்கப்போது அறிக்கை வெளிப்படுத்தும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

ஓதுவானெல்லாம் உழுவான் தலைக்கடை யென்றொரு நாட்டுப்பழமொழியுண்டு. விபசாயஞ் சிறுகச் சிறுக நாடும் தரித்திரத்திலாழ்ந்து வாழ்நாள் குன்றி க்ஷீணதிசை யடைந்து கெடுமென்பது கண்கூடு. வெளிப்படையாக கவனிப்போர்களுக்கு சாகுபடி நிலங்கள் முன்னைவிட இப்போது ஒன்றுக்கு ஒன்றரைப்பங்கு விரிந்திருப்பதாகக் கருதி விபசாயம் அபிவிருத்தி அடைந்திருப்பதாக நினைத்துவிடுகிறார்கள். நிலங்களைப்பண்படுத்தி திருத்தி விளைபோகங்களை இரண்டத்தனை விளையும்படி செய்துகொள்ளாமல் விளை நிலங்களை இரண்டத்தனையாக விரியும்படி செய்துகொண்டதனால் யாது பயன் பெறப் போகிறார்கள்? இவ்விதம் விளைநிலங்களை பண்படுத்திக் கொள்ளாமல் இரண்டத்தனையாக விரியும்படி செய்து கொண்டதனால் அரசாங்க வரிச்சுமை தான் அதிகப்படுமே தவிர ஜனங்கள் அதனிமித்தம் யாதொரு பயனும் பெறப்போவதில்லை. 1 ஏக்கர் நிலத்தில் 6 பொதி விளைந்த தானியங்கள் தற்சமயம் 2 பொதி விளைவது அரும் பிரயாசையாக இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் அரசாங்கக் கவனக்குறையும் விபசாயிகளுக் கேற்படும் பணக்கஷ்டமுந்தான். எனவே நேயர்களே! நாடார்களும் வருங்காலத்தில் இந்நாட்டில் உருக்கொண்ட வகுப்பாரென்று இலங்கிவருவதற்கு வாணிபத்தில் முதன்மைபெற்று வருகிற நம்மினத்தவர்களை துர் விநியோக வழிகளில் டாம்பீகமாக செலவு செய்யும் வீண் விரயங்களை கூடுமானவரை குறைத்து, பெரிய பெரிய மிராசுதார்களாக ஆக்கி வருவதற்கு இச்சங்கத்தின் மூலமாகப்பெரும் பிரயத்தனம் செய்து வருவீர்களென்று நம்புகிறேன்.

35 வருடங்களாக உத்தியோகம் முதலிய பதவிகளில் கவனஞ் செலுத்திவந்த இந்திய காங்கிரஸ் மகாசபை கூட்டத்தார்களை சாரமற்ற அத்துறைகளில் சித்தஞ் செலுத்துவதை தவிர்த்து, கைத்தொழில்களிலெல்லாம் தலை சிறந்ததும், வயிற்றுக்காகாரமில்லாமல் திண்டாடும் ஏழை மக்களிடம் பொருளாதார நிலை கிரவி இருப்பதற்கு ஏதுவானதுமான கைராட்டினங்களை அஹிம்சையின் கர்த்தாவாகிய மகாத்மா காந்தியடிகள் ஜனங்களிடத்தில் பரப்பும்படி முயன்று வருகிறார்கள். ஆதலால் இச்சங்கத்தில் தீர்மானமாகும் ஒவ்வொரு லக்ஷியமும் நமயினத்தவர்களின் ஏழை மக்களுக்கு பெரும்பாலும் பயன்படத்தக்கதாயிருக்கவேண்டும்.

பொது
வர்த்தமானங்கள்.

சீமையில் ஒருவர் புதிதாக ஒரு ஒளியை உற்பத்தி செய்திருக்கிறாராம். அதைக்கொண்டு 10 மைல் சுற்றளவுக்குள்ள எதையும் உடைத்துவிடலாமாம்.

* *

லண்டன் மிருக காட்சிசாலையில் உள்ள சிங்கம், புலி, முதலிய மாமிச பட்சணிகள் சென்ற வருஷத்தில் 450 குதிரைகளையும், 135 ஆடுகளையும் தின்றிருக்கின்றன. மற்ற மிருகங்களுக்கு 25 ஆயிரம் பவுண்டு தானியங்களும், 180 அந்தர் அரிசியும், 157 டன் வைக்கோலும், இனிப்பு பதார்த்தங்களை சாப்பிடும் மிருகங்களுக்கு 774 பவுண்டு சர்க்கரை பாணியும், 53 பவுண்டு தேனும் சென்ற வருஷம் செலவாயிருக்கின்றன.

* *

தென்னாப்பிரிக்காவில் ஒரு மனிதனின் மண்டை ஓடு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அது எட்டரை அங்குல நீளமும் 122 கன அங்குலம் கொள்ளும்படியானது மாயிருக்கிறது. இவ்வளவு பெரிய ஓடு கிடைத்ததனால் ஆப்பிரிக்காதான் மனிதர் முதலில் உற்பத்தியான இடம் என்ற கொள்கையை உறுதிப்படுத்துவதாக சில சாஸ்திரிகள் சொல்லுகின்றனர்.

* *

பிட்ஸ்பர்க்கைச் சேர்ந்த லீபார்ட்டன் வில்லியம்ஸ் என்பவர் காற்று மூலமாக மோட்டாரை ஓட்டும் விதத்தைக் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லுகிறார். முதலில் பெட்ரோல் எண்ணெயைக் கொண்டு மோட்டார் வண்டியை ஓடும்படி செய்து அது 10 மைல் வேகத்தில் போகும்போது பெட்ரோல் எண்ணெய் குழாயைமூடி விடவேண்டுமென்றும், காற்று உடனே ஓட்டும் வேலையைச் செய்கிறதென்றும் சொல்லுகிறார் சமீபத்தில் பிட்ஸ்பர்கில் முதல் முதலாக மாதிரி பார்க்கும்போது அவருடைய வண்டிகாற்று மூலம் மணிக்கு 62 மைல்வீதம் ஓடியது. இந்த முறைவிருத்தியாய் பூரணமாய்விட்டால் பெட்ரோலுக்காக செலவிடும் ஏராளமானபணம் இனி மோட்டார் வண்டிக்காரர்களுக்கு மிச்சப்படும்.

* *

முதல் முதலில் மல்பரி மரத்தின் பட்டையிலிருந்து கி. பி. 75-வது வருஷத்தில் காகிதம் செய்யப்பட்டது.

* *

துறைமுக நிர்வாகம்:-1925-26-ம் வருஷத்திய ரங்கூன் துறைமுகநிர்வாக யாதாஸ்து வெளியிடப்பட்டிருப்பதில் இவ்வருஷம் பல வழிகளிலும் முக்கியமாய் கவனிக்கத்தக்கதாயிருக்கிறது. வருமானம் ரூ8588982; செலவு ரூபாய் 7383776. முந்திய வருஷத்தைவிட வரவு அதிகமாய் வந்திருப்பதோடு துறைமுகத்திற்குள் வந்த கப்பலின் எண்ணமும் சென்ற வருஷத்தைவிட அதிகமாகும்.

* *

இந்தியரின் சரீரபலம்.

ஓரியண்டல் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியார் தங்களுடைய அனுபவத்திலிருந்து தயாரித்துள்ளவை.

பொதுவாக சரீரபலம்சம்பந்தப்பட்டவரையில், ஐரோப்பியர்களுக்கு சமதையாகச் சொல்லக்கூடியவர்கள் பஞ்சாப் இந்துக்கள் தான். அடுத்தாற்போல் முஸ்லீம்கள்; அதன் பிறகு வங்காள இந்துக்கள்; அவர்களுக்கடுத்தது பார்ஸிக்காரர்கள். மத்திய மாகாணத்திலும் இந்துக்கள் 35 வயதுக்கு மேற்பட்டு, திடகாத்திரமுள்ளவர்களாயிருக்கிறார்கள். வங்காள ஹிந்துக்களுக்குவயதாகவாகத் தொப்பை விழுகின்றது.

மார்பு அகலத்தில் பார்ஸிக்காரரும் பஞ்சாப் ஹிந்துக்களும் முதன்மையானவர்கள். சென்னை ஹிந்துக்கள் தான் இந்த அம்சத்தில் முழுமோசம். வயது ஆகவாக பஞ்சாப்ஹிந்துக்களுக்கு மார்பு அளவைவிட வயிற்றின் அளவு பெருகிக்கொண்டு வருகிறது. மற்றவர்களுக்கு இரண்டும் ஒரே அளவாயிருக்கின்றன.

கமுதி

வித்தியாபிவிருத்தி சங்கம்.

இச்சங்கத்தின் 11-வது வருட பூர்த்தி விழா நாளது செப்டம்பர் மீ 18, 19உ களில் விமரிசையாய் நடந்தேறியது. முதல் நாள் மதுரை நாடார்மகாஜன சங்கம் மானேஜர் ஸ்ரீமான் எ. பொன்னையாநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடி பல அறிஞர்கள் உபந்நியாசம் செய்தனர். அது சமயம் மதுரை ஹாப்ரன்ஹால்ட்ரெயினிங் ஸ்கூல் மிஸ்ட்ரஸ் மிஸ் பிரான்ஸிஸ் தைரியம் அம்மாள் அவர்கள் மாதர் கடமை என்னும் விஷயங்கொண்டு உருக்கமாய்ப் பேசினார்கள்.

இரண்டாம் நாள் மாலை 3 மணிக்கு சிவகாசி ஸ்ரீமான் ப. கொ. ச. அ. ஆறுமுகநாடார் எம். ஆர். எ. எஸ். (லண்டன்) எம். எல். ஸி. அவர்கள் வந்ததும், மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துவந்து கூட்டம் ஆரம்பமாயிற்று. அது சமயம் வரவேற்பு கமிட்டி சேர்மன் ஸ்ரீமான் வீ. ச. சங்கரநாராயணநாடார், மா. ச. மா. நடராஜநாடார், வீ. பி. சங்கரபாண்டியநாடார், ஆகியவர்களால் முறையே உபசரணைக் கமிட்டி அட்ரஸ், உபசாரப் பத்திரம், காரியதரிசிரிப்போர்ட் அண்டு வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. உபசரணை கமிட்டி அட்ரஸில் நகர்வளம், குடிவளம், குலவளம், கல்வி கலாசாலை பத்திரிகை ஆகிய விஷயாதிகளிற் புகுந்து நுண்பொருட்களை மிகுந்த ஆராய்ச்சியுடன் விளக்கமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

வரவு செலவு கணக்கில் 1—1—24 முதல் 31—7—1926 முடிய சந்தா, சந்தைவசூல் வகையில் ரூ 572-14-6ம் வட்டி, வாடகை பேப்பர்சாமான்கள் வித்தவரவான வகையில் ரூ475-8-1-ம் சங்ககட்டடத்திற்குநன்கொடைலாட்டரி மூலமாய் 2498-5-3-ம் விழா நன்கொடைவசூலில் ரூ 451-ம் வந்திருக்கிறது. இதில் பேப்பர், பியூன், சம்பளம், தீபம், ஆகிய வழக்கப்படிக்கான செலவு வகையில் ரூ 601-14-4ம் சங்கக்கட்டடத்திற்கு ரூ 4265-6-10-பிரைவேட் கட்டடத்திற்கு ரூ 292-கிரயம்மாரமத்துச்செலவுவகைக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பின் கனம் அக்கிராசனரவர்கள் தமது முகவுரைப் பிரசங்கத்தைப்படித்தார்கள். அதில் நகர் சிறப்பு சங்கம் பொறுமை, கல்வி, வர்த்தகம் விவசாயம் ஆகிய விஷயங்கள் குறித்து மிக விரிவாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரசங்கம் புஸ்தகரூபமாக அச்சடிக்கப் பெற்றிருக்கிறது. (அவற்றின் சாராம்சத்தை அடுத்த பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்) அவசர நிமித்தமாக கனம் அக்கிராசனரவர்கள் ஊர் செல்ல வேண்டியதிருந்ததால் ஸ்ரீமான் எ. பொன்னையாநாடார் அவர்கள் அக்கிராசனம் வகித்து மீட்டிங்கை நடத்தினர். உபந்நியாசங்கள் நடைபெற்றதின் பின் ராஜ வாழ்த்துடன் இரவு 11-மணிக்கு சபை கலைந்தது.

புல்லாநாயக்கன்பட்டி.

கமுதி என்னும் க்ஷேத்திரப்பூமிக்கு நேரே தென் மேற்கில் சுமார் 7 மைல் தூரத்தில் புல்லாநாயக்கன்பட்டி என்னும் கிராமத்தில் நாடார் குலத்தவர் வீடு சுமார் 50. மேற்படியூர் நாடார்கள் பொதுப் பண்டிலிருந்து ஒரு பெரிய பக்கா கட்டடம் கிரயம் ரூ 1500 க்கு வாங்கி அதில் நம் குலச் சிறுவர்களும், சுத்துப் பக்கங்களிலுள்ள பாளச்சி, பொம்மநாயக்கன் பட்டி, வாலக்குளம் இந்த மூன்று கிராமங்களிலுமாகச் சேர்த்து சுமார் 75 பிள்ளைகள் வரையும் கல்வி பயின்று வருகிறார்கள். இந்த ஸ்கூலுக்கு சென்ற வருடத்தில் தான் முதல் தடவையாக கிராண்டு ரூ 96 வந்திருக்கிறது. ஆனால் சென்ற வருடத்தைப் பார்க்கிலும் இந்த வருடம் பிள்ளைகள் சாஸ்தியாக வாசித்து வருகிறபடியால் கிராண்டு ரூ 155 வரையும் வருமென்று நம்புகிறோம். இந்த ஸ்கூல் நீடித்த ஆயுள் படைத்து நீடுழிகாலம் வாழும்படி சதா ஆண்டவனைத் துதி செய்து கொண்டு வருகிறோம் என்று ஸ்ரீமான் மா. சண்முக நாடார் அவர்கள் இரங்கூனிலிருந்து எழுதுகிறார்.

காமாக்ஷிபுரம்.

கண்டமநாயக்கனூர் ஜமீன் காமாக்ஷிபுரத்தில் புதிதாகக் கட்டிய அமெரிக்கன்மிஷன் பாடசாலையைப் பார்வையிடும் பொருட்டுவந்த பசுமலை ஹைஸ்கூல் பிரின்ஸிப்பால் ரெவரெண்ட் ஜான்மில்லர் எம். ஏ. டி. டி. கனம் பொருந்திய அம்மா அவர்களுடன் 21-9-26-யில் மாலை 5½மணிக்கு வர வாத்திய கோஷங்களுடன் அழைக்கப் பட்டு அலங்கரிக்கப்பட்டபந்தல்வழியாக பள்ளிக்குட்சென்று கனம் துரையவர்களே அக்கிராசனராக அமர்ந்தார். ஹெட்மாஸ்டர் கனம் கே. ஆர். தேவதாஸன் அவர்களால் நல்வரவு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அப்பால் பசுமலை, உள்ளூர் பள்ளிக்கூடத்து மாணவர்களாலும் சுக்கான்கல்பட்டி மிஸ்டர் எஸ். எஸ். முத்துச்சாமிநாடாரவர்களாலும், பாடல்கள் பாடப்பெற்றன. கனம் துரையவர்கள் ஆங்கிலத்தில் அன்பு என்ற பொருள் பற்றிப்பேச அதைஅம்மாளவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார்கள். இந்த அன்பு மஹாபரிசுத்த சற்குருவாகிய இயேசுக் கிறிஸ்து வினிடத்திலிருந்து நாங்கள் பெற்று உங்களையும் ஒருவர்க் கொருவர் அன்பாயிருக்கச் சொல்லுகிறோம். ஆகையால் ஒருவருக் கொருவர் பகை, குரோதம், பொறாமை முதலிய துற்காரியங்களை விட்டு, உன்னைப்போல் பிறனையும் நேசி என்று கிறிஸ்து நாதர் சொன்ன அன்பின் வசனங்களை எடுத்துக்காட்டினார்கள் என்று ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் தே. ஆர். தேவதாசன் எழுதுகிறார்.

விருதுநகர் ஞாபகச்சின்னம்.

விருதுநகரில் அநேக ஆண்டுகளாக உயர்தரப்பாடசாலையில் தலைமை உபாத்தியாயராக இருந்து காலம் சென்ற கனம் மாணிக்கவாசகநாடார் அவர்களின் ஞாபகச்சின்னம் ஒன்று மேற்படி கலாசாலையிலேயே விருதுநகர் பால்யநாடார் சங்கத்தார் செய்து முடிப்போம் என்று ஒப்புக்கொண்டார்கள். பின் மறந்துவிட்டதன் காரணம் யாதென்று தெரியவில்லை. இதை அவர்கள் செய்துவைக்கக்கடமைபட்டவர்கள் தானென இயம்பபோதிய சான்றுகளுள. ஆகையால் பால்யநாடார் சங்கத்தார் மட்டுமென்றி, விருதுநகர் நாடார்ஜன சமூகத்தவர்கள் ஒத்தாசையாயிருந்து இதைச்செய்து முடிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக ஸ்ரீமான் தேவவரம் யோசேப்புநாடார் அவர்கள் கொழும்பிலிருந்து எழுதுகிறார்.

தமிழ்ப்பரீக்ஷையில் நாடார்கள் வெற்றி.

திருநெல்வேலிதென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தார் சென்ற ஆனிமீ நடத்திய தமிழ்ப்பரீக்ஷைகளில் மூவர் தேர்ந்துள்ளனர். அம்மூவரில் இருவர் நாடார்கள் ஆவர். குறும்பலாப்பேரி ஆ. ஜெபரத்னம்நாடார், பா. தங்கசாமிநாடார் ஆகிய இருவரும் அச்சங்கத்தில் தமிழ்த் தேர்வு பெற்றுள்ளார்கள். தேர்ச்சிக்குறிப்பு வெளியிடுமுன்னர் சங்கத்து அமைச்சர் முதலாயினோர், பரீக்ஷை எழுதியிருந்த மாணவர்களின் சாதி மதம் ஆசிரியர் முதலான விவரங்களை மிக்க பரபரப்புடன் பலநாள் விசாரித்தார்களாம் என்று ஸ்ரீமான் பி. விசுவாசம்நாடார் எழுதுகிறார்.

மரத்தூளிலிருந்து சர்க்கரை.

மரமறுக்கும் சாலைகளில் இப்போது குப்பலாக வீணே கிடக்கும்மரத்தூளில் 100க்கு 65 வீதம் சர்க்கரை அடங்கியிருப்பதாக ஒரு பிரபல ரஸாயன நிபுணர்கண்டு பிடித்திருக்கிறார். 2 லட்சத்து 50 ஆயிரம் பவுன் செலவழித்து, இந்த இரகஸ்யத்தைடாக்டர் ஆர்மண்டி உலகத்தாருக்கு இப்போது அறிவித்திருக்கிறார். 100 பவுண்டு எடையுள்ள மரத் தூளைக்கொண்டு 65 பவுண்டு சர்க்கரையை அவர் உற்பத்திசெய்திருக்கிறார். உலகத்தில் இப்போது அறுக்கப்படும் மரங்களில் 100-க்கு 20 வீதம் மரத் தூளாக விழுந்து வீணாகிறது. இனி அது வீண் போகாமற் செய்துவிடலாமென்று டாக்டர் ஆர்மண்டி உறுதிகூறுகிறார்.

நாடார் கனவான்களே! இதை வாசியுங்கள்.

கருப்புக்கட்டி கமிஷன் & பார்வேடிங் ஏஜென்ஸி லிமிட்டட், திருநெல்வேலி.

மூலதனம் ரூ 300000 (மூன்று லட்சம்) பங்கு 1-க்கு ரூ 10

இக்கம்பெனி கவர்ன்மெண்டு சட்டப்படியும், இந்தியன் கம்பெனி ஆக்ட்பிரகாரமும் 1925-ம் வருஷம்ஜூலை மீ 1உ ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலையும் ஆரம்பிக்கப்பட்டது.

1926-ம் வருஷம் ஆகஸ்டு மீ 16உ முடிவாக 13½ மாதத்திற்குரிய கணக்குகளை கவர்ன்மெண்டு செர்டிபைய்ட் ஆடிட்டர் அவர்கள் சோதித்து, கோஷ்வாரு கணக்கும், லாப நஷ்டக் கணக்கும் போட்டிருக்கிறார்கள். ஷை கணக்கின்படி நாளது வருஷத்தில் இக்கம்பெனியில் ரூ 47822-5-0-க்கு சரக்குகள் வாங்கி கமிஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வருஷத்தில் வட்டி ரூபமாயும் கமிஷன் ரூபமாயும், டிஸ்கவுண்டு ரூபமாயும் கிடைத்திருக்கும் மொத்த வருமானம் ரூ 4154-2-0.

கம்பெனிக்கு இது முதல் வருஷமாக இருப்பதாலும் நமக்கு முன்னதாகவே பல வருஷங்களாக இவ்வியாபாரம் செய்து வருகிறவர்களுடன் நாம் போட்டிபோட்டு வேலை செய்ய வேண்டியதிருந்தமையாலும், வசூலிக்கப்பட்ட மூலதனம் குறைவாக இருப்பதாலும், இவ்வியாபாரத்தை ஸ்திரப்படுத்தி கம்பெனியை முன்னுக்குக் கொண்டுவரும் பொருட்டு செலவுகள் அதிகமாக ஏற்பட்டதினாலும் அதிக லாபம் கிடைக்க ஏதுகரமில்லாமல் போயிற்று.

இக்கம்பெனிக்கு அதிகமாக கருப்புக்கட்டி ஏற்றுமதிசெய்யும் நாசரேத்து ஊரிலும், திருவனந்தபுரத்திலும் பிராஞ்சு ஆபீஸ்கள் இருப்பதுடன், தூத்துக்குடியிலும் கமிஷன் அண்டு பார்வேடிங் டிப்பார்ட்மெண்டுகள் ஏற்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

கம்பெனியின் மூலதனம் கொஞ்சமாகஇருப்பதினால், வியாபாரம் விரிவாக நடக்கும் பொருட்டும், வந்த ஆர்டர்களுக்கு அனுப்பும் பொருட்டும், கொஞ்சம் கடன்வாங்கியிருக்கிறது. கம்பெனியின் மூலதனம் வியாபாரத்திற்குத் தோதாக விருத்தியாகி இருந்தால், கடன்களுக்கு செலுத்தும் வட்டிகள் எல்லாம் பங்காளிகளுக்கே லாபம்ஆகும். ஆகையால் தக்க லாபம் அடையக்கூடிய இந்தக் கம்பெனியில் நமது நாடார்நண்பர்கள் யாபேரும் அவரவர் வன்மைக்கும் தன்மைக்கும் தக்கவாறு பங்குகள் எடுத்தும், பங்குகள் எடுக்கமற்றவரைத்தூண்டியும் கம்பெனியின் நன்னோக்கம் சித்தியடையுமாறு உதவிபுரிய அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம். கம்பெனியில் பங்குகள் எடுக்க விரும்புவோர் கம்பெனியின் அஸிஸ்டண்டு மானேஜிங்டைரக்டர் அவர்களுக்கு அப்ளிக்கேஷன் பாரம், மற்றும் விபரம் அனுப்பும்படி எழுதி இனமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

N. B. இக்கம்பெனியின் அஸிஸ்டண்டு மானேஜிங்டைரக்டர் மகா-ா-ா-ஸ்ரீ T. S. தாஸன் நாடார் அவர்கள் B. Sc, F. S. Sc, F. I. C. A. கம்பெனியின் பங்கு விஷயமாக இலங்கைத் தீவில் பல இடங்கள் போய் நாடார் மகான்களைக் கண்டுபேசி ஏற்பாடுகள் செய்ய இலங்கைக்கு வந்திருப்பதால் அடியார்களுக்கு வேண்டிய உதவிபுரிந்து அவர்கள் வரும் நோக்கத்தை சித்தியடையச்செய்து அனுப்பும்படி இலங்கைவாழ் நாடார் கனவான்களை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்களை முகதாவில் கண்டு கம்பெனியைப் பற்றியும் மற்றக்காரியங்களையும் அறிய விரும்புவோர் ஏற்கனவே அவர்களுக்குத் தங்கள் விலாசத்தை எழுதி ஏற்பாடு செய்துகொள்ளவும். அவர்கள் கொழும்பு விலாசம்:—

c/o The Secretary, Y M C A
Fort, Colombo.

சுத்தக்கதர் உடுத்துங்கள், கை இராட்டினம் சுற்றுங்கள்.

உடனே குணம் தரும். முக்கியஸ்தர்கள் வாங்கி தர்ம வைத்தியம்செய்ய ஏதுகரமுள்ளது. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்பெறும்.

தேள்கடி மருந்து.

தைலம்
சீசா 1-க்கு 0-5-0
சீசா 12-க்கு 3-0-0
தூள் புட்டி 1-க்கு 0-6-0
புட்டி 12-க்கு 3-12-0 தபால் செலவு பிரத்தியேகம். குறைந்தது 3 சீசா அல்லது 3-புட்டி தருவிப்பது நலம்.

☞ க. பெ. ச. சமுத்திரம் சகோதரம்
பங்கஜவிலாஸ், விருதுநகர்.

கைக்குத்தரிசி சமைத்துண்ணுங்கள்.

விளக்கெண்ணெய் தீபம் ஏற்றுங்கள்.

காந்தியடிகள் எழுதிய "ஆரோக்ய வழி" என்னும் புஸ்தகம் படியுங்கள்.

வேம்பை விரும்பு.

வேப்பம் பூத் துவையல், வேப்பங்காய் கறி, வேப்பிலைப் பானம் இவைகளை சில வேளா வேளையில் சாப்பிட்டு வந்தால் வயிற்றிலுள்ள விஷக் கிருமிகள் செத்துப்போகும். காலரா, பிளேக் முதலிய தொத்து வியாதிகள் பற்றாது. அக்காற்று பட்டாலே தேக கஷ்டம் ஒழியுமென்று பல்லுப்போன பாட்டிகள் மூலம் கேட்டிருக்கின்றோம்.

ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம்.

அத்தியாயம் 18.

மகாத்மா காந்தி தமது அனுபவங்களை "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதி வருவதில், 2-வது பாகம் 18-வது அத்தியாயம் பின் வருமாறு:—

ஒரு கோர்ட்டு அல்லது நியாயசபை தராசுக்கு சமானம். பட்சபாதமில்லாத, குருட்டுத்தனமான ஆனால் சாமர்த்தியத்துடன் கூடிய ஒரு வயோதிக ஸ்திரீயின் கையில் அத்தராசு இருப்பதாக வைத்துச் சொல்ல வேண்டும். தர்மதேவதையாகிய அந்த ஸ்திரீ வெளிப் பார்வையைக்கண்டு ஏமாந்து போகாமல் உண்மையை நன்றாக உணர்ந்து நியாயம் வழங்குவதற்காக அத்தேவியின் கண் வேண்டுமென்றே பார்வையற்றதாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கேட்டாலில் தலைகீழ்ப் பாடம், சுப்ரீம் கோர்ட்டு நியாயத்தை உணர்ந்தபடி அங்கு செய்துவிட்டார்கள்.

சுப்ரீம் கோர்ட்டு அட்வோகேட்டுகளில் ஒருவராக என்னைப் பதிவு செய்யும்படி கேட்டேன். பம்பாய் ஹைகோர்ட்டு எனக்குக் கொடுத்திருந்த பிரவேச அனுமதிச் சீட்டொன்று வைத்திருந்தேன். கேட்டாலில் இரண்டு சர்டிபிகேட்டுகளை சேர்த்து அனுப்பி பிரவேச அனுமதி கேட்க வேண்டும். ஆனால் பம்பாய் ஹைகோர்ட்டில் நான் புகுந்த போது ஆங்கில சர்டிபிகேட்டை அங்கேயே கொடுத்துவிட்டேன். ஆகையால் ஸேத் அப்தல்லா மூலமாக இரண்டு பிரபல ஐரோப்பியர்களிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி, அது நல்லபயனளிக்குமென்று நினைத்து, தாக்கல் செய்தேன். அட்டர்னி ஜெனரல் அந்த விண்ணப்பத்தைக் கிரமப்படி ஆஜர்செய்து, என்னை அட்வோகேட்டாகப் பதிவு செய்யும்படி பிரேரணை செய்யவேண்டும். தாதா அப்தல்லாவின் வக்கீலாகிய மிஸ்டர் எஸ்காம்பிதான் அச்சமயம் அட்டர்னி ஜெனரலாயிருந்தார். அவர் சந்தோஷத்துடன் எனது விண்ணப்பத்தை ஆஜர்செய்ய ஏற்றுக் கொண்டார்.

ஆனால் வக்கீல் சங்கத்தார் என்னுடைய விண்ணப்பத்தை எதிர்க்கப் போவதாக அறிவித்தனர். என்னுடைய அஸல் ஆங்கில சர்டிபிகேட்டை நான் விண்ணப்பத்துடன் கோர்த்திருக்கவில்லையென்பது அவர்களுடைய முதலாவது ஆட்சேபம். நான் கறுப்புமனிதன் என்பதுதான் அவர்களுடைய பிரதான ஆட்சேபனை. கேட்டால் முன்னுக்கு வந்ததெல்லாம் ஐரோப்பியர் மூலமாகத்தான்; ஆகையால் ஐரோப்பிய பாரிஸ்டர்களே அங்கு பிரபலமாக விளங்கவேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றிற்று. கறுப்புமனிதர்களைச் சேர்த்துக்கொண்டால் ஐரோப்பியர்களுக்குப் பந்தோபஸ்துக் குறைவு ஏற்பட்டுவிடுமென்று அவர்கள் பயந்தனர். ஆகையால் ஒரு பிரபல லாயரைக்கொண்டு எனது விண்ணப்பத்தை எதிர்க்க வக்கீல் சங்கத்தார் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அந்த லாயர் ஸேத் அப்தல்லாவுக்கு வேண்டியவர். ஆகையால் என்னைக் கூப்பிட்டு என்னுடைய பூர்வோத்திரங்களைப்பற்றி விசாரித்தார். எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகு அவர் என்னைப்பார்த்து "உங்கள் விஷயத்தில் எனக்கு ஒரு ஆட்சேபனையும் கிடையாது. நீங்கள் ஏதோ இங்கு பிறந்த பெயர்வழியென்று நான் கருதிவிட்டேன். அஸல் சர்டிபிக்கேட்டை நீங்கள் ஆஜர்ப்படுத்தாததால் என்னுடைய சந்தேகம் இன்னும் அதிகமாயிற்று. சில பெயர்வழிகள் மற்றவர்களுடைய சர்டிபிகேட்டை வைத்துக்கொண்டு ஏமாற்றுவதுண்டு. ஐரோப்பிய வியாபாரிகளிடமிருந்து நீங்கள் வாங்கி வந்திருக்கிற சர்டிபிகேட்டுகளால் யாதொரு பயனுமில்லை. உங்களைப்பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்?" என்றார். நான்:—இங்கு யாருமே எனக்குப் கூட நானிங்கு வந்த பிறகுதான் என்னைத்தெரியும்.

அட்டர்னி ஜெனரல்:—ஆனால் அவரும் நீங்களும் ஒரே ஊர் என்கிறீரே? உங்களுடைய தகப்பனார் ஒரு பிரதான மந்திரியாக அங்கு வேலை பார்த்திருந்தால், உங்களுடைய குடும்பத்தைப் பற்றி ஸேத் அப்தல்லாவுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்க வேண்டும். ஸேத் அப்தல்லாவின் கைப்பட ஒரு பிரமாணப்பத்திரம் நீங்கள் ஆஜர்செய்தால் எனக்கு ஆட்சேபனை யிராது. உங்களுடைய விண்ணப்பத்தை நான் எதிர்க்கமாட்டேன்.

இந்த பதில்கொஞ்சம் தைரியமளித்தது. தாதா அப்தல்லாவின் சர்டிபிகேட்டை முதலிலேயே அனுப்பியிருந்தால், அது ஐரோப்பியருடைய சர்டிபிகேட்டல்லவென்று நிராகரித்திருப்பார்கள் என்று எனக்குள்ளே நினைத்துக்கொண்டேன். "என்னுடைய பிறப்பு வளர்ப்பு முதலிய பூர்வோத்திரங்களை எதற்காக அவர்கள் விசாரிக்க வேண்டுமென்று எனக்குப் புலப்படவில்லை; ஆயினும் அப்தல்லாவிடமிருந்து ஒரு சர்டிபிகேட் வாங்கியனுப்ப நான் தயாராயிருக்கிறேன்" என்று அட்டர்னி ஜெனரலிடம் தெரிவித்தேன். சொன்னபடி ஒரு சர்டிபிகேட்டும் வாங்கியனுப்பினேன். அட்டர்னி ஜெனரல் திருப்தியடைந்தார். ஆனால் வக்கீல் சங்கத்தாருக்கு அது போதவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் எனது விண்ணப்பம் ஆலோசனைக்கு வந்தபோது, அவர்கள் எதிர்த்தார்கள். ஆனால் கோர்ட்டார் அவர்களுடைய ஆட்சேபனையைப் பொருட்படுத்தவில்லை.

சீப் ஜஸ்டிஸ் பின்வருமாறு சொன்னார்:—"அஸல் சர்டிபிகேட்டை மனுதார் அனுப்பவில்லையென்ற ஆட்சேபம் அர்த்தமில்லாமலிருக்கிறது. மனுதார் பிரமாணமாக எழுதிக்கொடுத்திருப்பது உண்மையல்லவென்று தெரிந்தால் அவர்மீது பின்னிட்டு நடவடிக்கை யெடுத்துக் கொள்ளலாம்; வேண்டுமானால் பெயரையும் அடித்துவிடலாம். வெள்ளையர் கறுப்பர் என்று சட்டத்தில் யாதொரு வித்தியாசமும் கற்பிக்கப் பட்டிருக்கவில்லை. ஆகையால் மிஸ்டர் காந்தியை அட்வோகேட்டாகப் பதிவு செய்யக் கூடாதென்று தடுக்க எனக்கு அதிகாரமில்லை" என்று சொல்லிவிட்டு, என்னைப்பார்த்து "பிரமாணம் எடுத்துக் கொள்ளுங்கள்." என்று ஆக்ஞாபித்தார். நான் அங்ஙனமே எழுந்து நின்று, ரிஜிஸ்டிரார் முன்பாக சம்பிரதாயப்படி பிரமாணம் எடுத்துக்கொண்டேன். பிறகு சீப்ஜஸ்டிஸ் என்னைப் பார்த்து, "மிஸ்டர் காந்தி! உங்களுடைய தலைப்பாகையை இனி எடுத்துவிட வேண்டும். பாரிஸ்டர்களுக் குரித்தான உடை சம்பந்தப்பட்ட விதிகளின்படி நடந்து கொள்ள வேண்டும்" என்று சொன்னார். என்னுடைய ஆட்சேபனை செல்லாதென்று எனக்குத் தெரியும். ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் எந்தத் தலைப்பாகையை நான் எடுக்க மறுத்தேனோ அதை கேட்டால் சுப்ரீம் கோர்ட்டில் நான் எடுத்து விட்டேன். நான் எடுக்க மறுத்திருந்தால் அது நியாயமாக இருந்திராது. அதோடு இன்னும் பெரிய போராட்டங்கள் பாக்கியிருக்கையில் அற்ப சண்டை எதற்கென்று எனக்குப் பட்டது. தலைப்பாகையைப் பிடிவாதமாக வைத்துக்கொண்டு அனுவசியமாகப் போராடுவதில் என்னுடைய சாமர்த்தியத்தை வீணாக்க எனக்கு இஷ்டமில்லை.

நான் இவ்வாறு பணிந்துபோனதை என்னுடைய பலஹீனமென்று ஸேத் அப்தல்லாவும் மற்ற நண்பர்களும் கருதினார்கள். கோர்ட்டில் பேசும்போது தலைப்பாகையை வைத்துக்கொண்டு பேசும் உரிமையை நான் இழக்கக் கூடாதென்பது அவர்களுடைய அபிப்பிராயம். அவர்களோடு நான் தர்க்கம் செய்ய வேண்டியதாயிற்று. 'தேசத்தோடொத்துவாழ்' என்ற மூதுரையை அவர்களுக்கு ஞாபகப்படுத்துரைத்தேன். இந்தியாவில் எந்த ஆங்கில உத்தியோகஸ்தர் அல்லது ஜட்ஜியாவது இம்மாதிரி உத்தரவுபிறப்பித்தால் அதை ஆட்சேபிக்கலாமேயன்றி கேட்டாலில் கேட்டால் வழக்கப்படியே நடந்துகொள்ள நான் கட்டுப்பட்டவனென்று எடுத்துக்காட்டி நண்பர்களை சமாதானப் படுத்தினேன். ஆயினும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு மாதிரியாக ஒரே விஷயத்தில் நடந்த கள் கடைசிவரை ஒத்துக்கொள்ளவேயில்லை. சமயத்துக்கேற்ற சமரஸ புத்திதான் அழகானதென்று என்னுடைய அனுபவ பூர்வமாக நான் இப்போது சொல்வேன். ஸத்தியாக்கிரஹிக்கு அந்த புத்தி இன்றியமையாதது. இதனால் எனது நண்பர்களுக்கு மன வருத்தமும், உயிருக்கு ஆபத்தும் ஏற்பட்ட சமயங்கள் பலவுண்டு. ஸத்தியம் கடினமான விஷயம்; ஆனால் அதை எடுத்தாளத் தொடங்கிய பின் புஷ்பத்தைப்போல் இலேசாயிருக்கும்.

கேட்டால் வக்கீல் சங்கத்தார் என்னுடைய விண்ணப்பத்தை எதிர்த்ததன் மூலமாக எனக்குத் தென் ஆப்பிரிக்காவில் ஒரு விளம்பரம் ஏற்பட்டது. பெரும்பாலான பத்திரிகைகள் வக்கீல் சங்கத்தின் ஆட்சேபத்தையும் பொறாமையையும் கண்டித்தன. என்னுடைய வேலை இலகுவாகிவிட்டது.

மானத்தைக்காப்பதும் ஞானத்தைக் கொடுப்பதும் ராட்டினமே.

சென்ற வாரத்திய "யௌவன இந்தியா" பத்திரிகையில் சில ஏழை கூர்ஜர ஸ்திரீகள் ராட்டினஞ்சுற்றி கௌரவமாகக் காலந்தள்ளுவதைப் பற்றி சிலமுக்கியமானவிவரங்கள்வெளியாயிருக்கின்றன. அதாவது:—

ஆமதபாத்துக்கு 30மைல் தூரத்தில் பாஹியால் என்ற கிராமமிருக்கிறது. 5000 பேர் அங்கு வசிக்கிறார்கள். 92 ராட்டினங்கள் சுழல்கின்றன. நூற்பவர்கள் அனைவரும் ஸ்திரீகள். அவர்களில் சிலரைக்கண்டு பேசியபோது அவர்கள் பின் வருமாறு தெரிவித்தனர்:—

முதலாவது ஸ்திரீ—எனக்கு வயது 80. 2 பிள்ளைகள் உண்டு. ஒருவன் 18 ரூபாய்வருஷமொன்றுக்குச் சாப்பாட்டுக்குக்கொடுக்கிறான். எனது மருமகன் ஏதாவதுகொடுப்பான். வேறுவரும்படி கிடையாது. சென்ற 6 மாதமாக ராட்டினஞ் சுற்றுவதில் எனக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. நேர்த்தியான நூல் நூற்கத் தெரியாததால் பட்டை போட்ட பஞ்சு எனக்குக் கொடுத்துதவத் தயங்குகிறார்கள். 8. நெ. நூற்றுக் கொடுப்பதால் பவுண்டுக்கு 3½ அணாக் கிடைக்கிறது.

இரண்டாவது ஸ்திரீ:—எனக்கு வயது 40. வாரம் 6 அணா ராட்டினத்தால் சம்பாதிக்கிறேன். 11 நெ. நூற்கிறேன். தையல் வேலையும் தெரியும். பட்டைபோட கற்றுக்கொள்ள தயார். எனது புருஷனுக்கு 20 ரூபாய் சம்பளம். ராட்டினம் சுற்றுவதால சிலதினப்படி சாமான்கள் வாங்க அது உதவியாயிருக்கிறது.

3-வது ஸ்திரீ:—எனக்கு வயது 50. நானும் புருஷனும் நீங்கலாகவேறுயாருமில்லை. எங்கள் பிள்ளைகள் செத்துப் போய்விட்டார்கள். சாப்பாட்டுக்கு ஏதோ ஈசுவரன் கொடுத்திருக்கிறார். ஆனால் சும்மா காலத்தை ஓட்டுவது கஷ்டமாயிருக்கிறது. ராட்டினம் சுற்றுவது மனதுக்கு உற்சாகம் ஊட்டுகிறது.

4-வது ஸ்திரீ:—வயது 33. 7 வருஷத்துக்கு முன் புருஷன் இறந்துவிட்டான். 10 வயதில் ஒரு பிள்ளை யிருக்கிறது. எனக்கு நூற்கத்தெரியும், தையல் வேலையும் பொத்தான் செய்யும் வேலையும் தெரியும், பொத்தான்களுக்கு கிராக்கியில்லை. ஆகையால் மலிவான விலைக்குக்கொடுக்க வேண்டியிருக்கிறது. எல்லா வீடுகளிலும் தையல் தெரிந்திருப்பதால், எனக்கு அதிக வேலை கிடைப்பதில்லை. நல்ல வேளையாக ராட்டினம் வந்து சேர்ந்தது. ஆனால் பட்டைபோட்ட பஞ்சு போதியவளவு அகப்படுவதில்லை.

பஞ்சு இருந்தால் மாதம் 2 ரூபாயாவது கிடைக்கிறது. இல்லாவிடில் 12 முதல் 14 அணாக்கிடைக்கிறது. அது கிடைத்தால் கூட ஜீவனத்துக்கு எவ்வளவோ உதவியாயிருக்கிறது.

5 வது ஸ்திரீ:- வயது 100. நானும் புருஷனுந்தான். புருஷன் படுத்தபடுக்கையாயிருக்கிறார். ஆயுள்காலம் பூராவும் ஸைனியத்தில் சேவித்தார். 5 ரூபா பென்ஷன்வருகிறது. நல்லவேளையாக ராட்டினம் சமயத்தில்வந்து சேர்ந்தது. 3 களுக்கு ஒரு பவுண்டு நூற்கிறேன். ஆனால் பஞ்சுக்குத்தான் பஞ்சமாயிருக்கிறது. சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் விற்றாகிவிட்டது. கைக்காப்பையும் விற்றாகிவிட்டது. ஒரு ராட்டினம் கடன்வாங்கி வைத்திருக்கிறேன்.

6-வது ஸ்திரீ:---வயது 45. நான் ஏகாங்கி. மாதம்2½ ரூ ராட்டினஞ்சுற்றி சம்பாதிக்கிறேன். என் மருமகன் இதற்கு முன் ஒத்தாசை செய்துவந்தான். இப்போது நிறுத்திவிட்டான். தெய்வம் எனக்குக் கை கால்கள் கொடுத்திருக்கும்போது மற்றவர்களை எதிர்பார்த்திருப்பானேன்.

7-வது ஸ்திரீ:—வயது 28. என் புருஷனுக்கு சர்க்காரில் சேவகம். எனக்குப் பிள்ளை பிறக்காததால் மற்றொரு தாரம் மணந்தார். அவள் வந்த பின் என்னை துரத்திவிட்டார். கோர்ட்டுக்குப் போனேன்; ராஜி யேற்பட்டது. இப்போது நான் வீட்டிலேயே யிருக்கிறேன். ராட்டினஞ் சுற்றுகிறேன். ராவில் அவர்வரும்போது நான்வெளியே போய்விடுகிறேன். அவர்போன பிறகே வீட்டுக்குத் திரும்புகிறேன். மாதம் 1½ முதல் 13 ரூ வரையில் ராட்டினத்தில் கிடைக்கிறது.

பர்மா வர்த்தமானங்கள்.

சான்ஸலர் பதவி:—ரங்கூன் ஸர்வகலாசாலை உப அத்தியக்ஷஸ்தானம் ஸர். டாபர்ட் ரங்கூனைவிட்டுப் போகையில் அந்த ஸ்தானத்திற்கு வேலை பார்க்கும்படி ஜஸ்டிஸ் மாங்பாவை கவர்னர் நியமித்திருக்கிறார்.

* *

கவர்ன்மெண்டு அறிக்கை:—மேல் சிந்து ஜில்லாவில் 20 சங்கங்கள் விரோதமானவை என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

* *

விசாரணைக் கமிட்டிகள்:—பெகு டிவிஷன் கமிஷனர் மிஸ்டர் எப். பி. லீச்சின் தலைமையின் கீழ் நியமிக்கப்படும் கமிட்டி சமீப காலங்களில் நோய்களைப்பற்றியும் ரங்கூனில் பொதுவான சுகாதார நிலைமையைப்பற்றியும் விசாரித்துச் சிபார்சுசெய்யும். ஆக்டிங் அபிவிருத்தி கமிஷனர் மிஸ்டர் சால்மர்ஸ் தலைமை வகிக்கும். கமிட்டி கீழ்பர்மாவில் சமீபத்தில் பலமான வெள்ளமேற்பட்டதின் காரணங்களைப்பற்றி விசாரித்து ரயில் போக்குவரத்தும் இதர போக்குவரத்தும் ஸாதனங்களும் எவ்வளவு தூரம்வெள்ளத்தால் பாதிக்கப்படுமென்றும் என்னபரிகாரம் செய்யலாமென்றும் சிபார்சுசெய்யும்.

நோட்டீஸ்.

தூத்துக்குடி டி. மு. கோர்ட்டு
OP NO 64 OF26.

சு. துரைச்சாமி நாடார் அன்பிரதர்ஸ்—மனுதார்.

டி மனுதார் தெரிவித்துக்கொள்கிறதென்னவென்றால்:-- இறந்துபோன தருவைக்குளம் அந்தோனி முத்து நாடார் மகன் சவரிமுத்துநாடாருக்கு டி யூர் மரியமிக்கேல் நாடார் மகன் காத்தேரிய நாடார் 18-8-25ல் ரூ 500க்கு எழுதிக் கொடுத்திருக்கிற பிராமிசேரி நோட்டை டி சவரிமுத்துநாடாருடைய வாரீசுகளான வி. ஏ. யேசுவடியநாடார் வி. ஏ. தொம்மைக்குருசு நாடார் லூர்த்து நாடாத்தி 3 இவர்களால் மனுதார்க்கு மேடோராயிருப்பதில் அதன் தொகைக்காக மனுதார் தனக்கு வாரீஸ் சர்டிபிகேட்டு கிடைக்க வேணுமென்று மனுக்கொடுத்து அதின் ஹீயரிங்கிக்காக 8-10-26ல் வாய்தாப் போடப்பட்டிருக்கிறது. அதில் ஆக்ஷேபனையுள்ளவர்கள் டி கோர்ட்டில் தெரிவித்துக் கொள்ளலாம்.

கந்தசாமி பிள்ளை
மனுதார்வக்கீல்.